# 2014 ஆம் ஆண்டுக்கான
# செயல்நிறைவேற்று அறிக்கையும்
# வருடாந்த கணக்குகளும்.

# வர்த்தக திணைக்களம்

## தலைப்பு 295

*4ஆவது மாடி, ரசஷண மந்திரய,*
*இல. 21, வொக்ஸோல் வீதி*
*கொழும்பு 02.*
*தொலைபேசி: 011 – 232 9733 / 242 6114*
*தொலைநகல்: 011 – 243 0233*
*மின்னஞ்சல்: **fortrade@doc.gov.lk***
*இணையதளம் : **www.doc.gov.lk***

# பொருளடக்கம்


1. *அறிமுகம்*
2. *இலங்கையின் வெளிநாட்டு வர்த்தக மீளாய்வு 2014*
3. *இருதரப்பு வர்த்தக மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு*
4. *வர்த்தகம், பொருளாதாரம் மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு மீதான கூட்டு ஆணைக்குழு*
5. *பல்தரப்பு வர்த்தக உறவுகள்*
6. *பிராந்திய பொருளாதார ஒத்துழைப்பு*
7. *வர்த்தக, முதலீடு மற்றும் சுற்றுலா ஊக்குவிப்பு*
8. *உற்பத்தி நாட்டு சான்றிதழ்களின் வழங்குகை*
9. *பதவியினர் இடநகர்வுகள்*
10. *நிதிக் கூற்று*


*******************************

# 1.0 அறிமுகம்

***திணைக்களத்தின் செயற்பணி***

***“இலங்கையின் ஒட்டு மொத்த பொருளாதார வளர்ச்சிக்கு பயன் மிக்கதான சேவையினை வழங்குவதன் மூலம் மொத்த உற்பத்தி, வருமானம் மற்றும் வேலைவாய்ப்பு மட்டங்களில் அதிகரிப்பினை ஏற்படுத்துவதனூடாக வாழ்க்கைத் தரங்களை உயர்த்தி வாழ்வின் அதி உன்னத இடத்தை அடைந்து கொள்ளும் நோக்கில் அரசாங்கத்தின் வர்த்தக கொள்கையினை வினைத்திறனுடன் அமுலாக்குவதன் ஊடாக இலங்கையின் வெளிநாட்டு வர்த்தக தொடர்புகளை இருதரப்பு, பிராந்திய மற்றும் பல தரப்பு மட்டங்களில் ஊக்குவித்து விருத்தி செய்தலாகும்.”***

வர்த்தக திணைக்களமானது (வ.தி), கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சின் வர்த்தக ரீதியிலான கொள்கை விடயங்களில் மதியுரை வழங்கும் முகமையகமென்ற முக்கியமான பாத்திரத்தினை வகிப்பதுடன் இலங்கையின் வெளிநாட்டு வர்த்தக உறவுகளின் விருத்தி மற்றும் மேம்பாட்டுக்கான அதிகாரத்தினை அமுல்படுத்தும் முக்கியமான நிறுவனமாகவும் செயற்படுகின்றது. திணைக்களத்தினால் இது தொடர்பில் மேற்கொள்ளப்படும் வர்த்தக கொள்கை மற்றும் ஊக்குவிப்பு நடவடிக்கைகள் உள்ளடங்கலான தொழிற்பாடுகளும் திணைக்களத்தினால் பொறுப்பேற்கப்பட்ட அத்தகைய பணிகளும் சுருக்கமாக கீழே தரப்பட்டுள்ளன.

- உரிய வரிசை அமைச்சுக்கள் / அதிகாரசபைகள் மற்றும் தனியார் துறை அக்கறைதாரர்களுடன் ஒருங்கிணைந்து இலங்கையின் சர்வதேச வர்த்தக கொள்கையினை வகுத்தலும் அமுல்படுத்துதலும்.
- நாட்டின் ஒட்டுமொத்த அபிவிருத்தியினை விருத்தி செய்யும் வகையில் வெளிநாட்டு வர்த்தக கொள்கை தொடர்பில் கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சுக்கு மதியுரை வழங்குதல்.
- வெளிநாடுகளிலுள்ள இலங்கை வர்த்தக பிரதிநிதிகளினூடாக வர்த்தகம், முதலீடு மற்றும் சுற்றுலா துறைகளிலிலுள்ள இலங்கையின் வர்த்தக நலன்களை ஊக்குவித்தல்.

மீளாய்வு காலப்பகுதியில், திணைக்களமானது வெளிநாட்டு வர்த்தக துறை தொடர்பான அரசாங்கத்தின் நோக்கு மற்றும் நாட்டின் ஒட்டுமொத்த பொருளாதார அபிவிருத்தி நோக்கில் மேற்கொள்ளக்கூடிய முக்கியமான பங்களிப்புக்களின் அடிப்படையில் அதன் வேலை நிகழ்ச்சித்திட்டங்களை தொடர்ந்தும் மேற்கொண்டு வந்துள்ளது. எனவே, 2014 ஆம் ஆண்டுக்கான வேலை நிகழ்ச்சித்திட்டம், தற்போதிருக்கும் வர்த்தக உறவுகளை மேலும் வலுப்படுத்துதல், புதிய சந்தைகளையும் உற்பத்திப் பொருட்களையும் ஊக்குவித்தல், சர்வதேச வர்த்தக முறைமையிலுள்ள சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் துறையின் வினைத்திறன் மிக்க பங்களிப்பினை ஊக்குவித்தல் மற்றும் தென்னாசிய பிராந்தியத்தில் வர்த்தகத்தில் முன்னணி வகிக்கும் நாடாக இலங்கையை

ஊக்குவித்தல் போன்ற நடவடிக்கைகளில் கூடிய கவனம் செலுத்தியுள்ளது. திணைக்களம், அதன் வெளிநாட்டு வர்த்தக பிரதிநிதித்துவத்தினூடாக நேரடி வெளிநாட்டு முதலீடு மற்றும் அவ்வாறே இலங்கை சுற்றுலாத்துறை ஆகியவற்றினை ஊக்குவிப்பது நோக்கில் தேவையான வழிகாட்டுதல்களையும் உதவிகளையும் வழங்கியுள்ளது.

# 2.0 2014 இல் இலங்கையின் வெளிநாட்டு வர்த்தக மீளாய்வு

## 2.1 ஏற்றுமதி மற்றும் இறக்குமதி செயல்நிறைவேற்றம்

இலங்கை சுங்கத் திணைக்களத்தின் தரவுகளின்படி, 2014 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இலங்கையின் மொத்த ஏற்றுமதி சம்பாத்தியமானது 11,044 மில்லியன் அமெரிக்க டொலருக்கு அதிகரித்துள்ளதுடன் இது 2013 இல் 10,009 மில்லியன் அமெரிக்க டொலராக இருந்துள்ளதுடன் 10% அதிகரிப்பினைப் பதிவு செய்துள்ளது. புடவைகள் மற்றும் தைத்த ஆடைகளின் ஏற்றுமதிகளில் ஏற்பட்ட கணிசமானளவு அதிகரிப்பு காரணமாக மொத்த ஏற்றுமதிகளில் ஏறக்குறைய 75% இனை பிரதிபலிக்கின்ற கைத்தொழில் ஏற்றுமதிகள் 2014 இல் ஏற்றுமதி வளர்ச்சிக்குப் பாரிய பங்களிப்பினை வழங்கியுள்ளது. தெங்கு உற்பத்திகள், தேயிலை மற்றும் குறித்த சில சிறு விவசாய ஏற்றுமதிகளில் முன்னேற்றம் காணப்பட்டமையினால் 2014 இல் விவசாய ஏற்றுமதிகளிலிருந்தான சம்பாத்தியம் 2,794 மில்லியன் அமெரிக்க டொலரினைப் பதிவு செய்துள்ளதுடன் இது 6.5% அதிகரிப்பாகும்.

இலங்கை சுங்கத் திணைக்களத்தின் தரவுகளின்படி,2014 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இலங்கையின் மொத்த இறக்குமதி செலவினமானது இல் 19,246 மில்லியன் அமெரிக்க டொலருக்கு அதிகரித்துள்ளதுடன் இது 2013 இல் 17,098 மில்லியன் அமெரிக்க டொலராக இருந்துள்ளதுடன் இது 13% அதிகரிப்பினைக் காட்டுகின்றது. இடைநிலைப் பொருட்களின் இறக்குமதி குறிப்பாக பெற்றோலிய உற்பத்திப் பொருட்கள் மற்றும் புடவைகள் மற்றும் துணி வகைகளின் இறக்குமதிகளின் காரணமாகவே இறக்குமதிச் செலவினம் பெருமளவில் அதிகரித்துள்ளது. 2014 இல் 11,398 மில்லியன் அமெரிக்க டொலரில் காணப்பட்ட இடைநிலைப் பொருட்களின் இறக்குமதிச் செலவினமானது மொத்த இறக்குமதிச் செலவினத்தில் 60% இனைக் கொண்டுள்ளதுடன் இது 2013 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 8% அதிகரிப்பினைப் பிரதிபலிக்கின்றது.

**அட்டவணை 1**

**மொத்த இறக்குமதிகள், ஏற்றுமதிகள் மற்றும் வர்த்தக மீதி : 2009 – 2014**


**(மில்.அ.டொலர் பெறுமதியில்)**

| ஆண்டு | ஏற்றுமதிகள் | வளர்ச்சி% | இறக்குமதிகள் | வளர்ச்சி% | மொத்த வர்த்தகம் | வர்த்தக மீதி |
|---|---|---|---|---|---|---|
| 2009 | 7,118 | -13.0 | 9,767 | -28.0 | 16,885 | -2,648 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 2010 | 8,294 | 16.5 | 12,340 | 26.4 | 20,634 | -4,047 |
| 2011 | 10,018 | 20.8 | 19,703 | 59.7 | 29,721 | -9,685 |
| 2012 | 9,181 | -8.4 | 17,889 | -9.2 | 27,069 | -8,708 |
| 2013 | 10,009 | 9.0 | 17,098 | -4.4 | 27,107 | -7,088 |
| 2014 | 11,044 | 10.3 | 19,246 | 12.6 | 30,290 | -8,202 |

*மூலம்: இலங்கைச் சுங்கம்*

**வெளிநாட்டு வர்த்தகத்தின் போக்கு 2014**




## 3.0 இருதரப்பு வர்த்தகமும் பொருளாதார ஒத்துழைப்பும்

2014 ஆம் ஆண்டு காலப்பகுதியில், இலங்கையானது அதன் பிரதான வர்த்தக பங்காளி நாடுகளுடனும் அவ்வாறே ஏனைய நாடுகளுடனும் இருதரப்பு வர்த்தகம் மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு ஆகியவற்றினை மேம்படுத்துவது தொடர்பில் கூடிய கவனம் செலுத்தியுள்ளது. ஐக்கிய அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், சீனா, இந்தியா, பாகிஸ்தான் யப்பான், வியட்னாம், ரஷியா மற்றும் முன்னயை சோவியத் ஒன்றிய நாடுகள், ஆபிரிக்கா மற்றும் மத்திய கிழக்கு பிராந்தியம் என்பவற்றுடனான வர்த்தக மற்றும் பொருளாதார உறவுகள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவையாக அமைந்துள்ளன. மீளாய்வு காலப்பகுதியில், இலங்கையானது, இந்தியா மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளுடன் கைச்சாத்திட்டுள்ள இருதரப்பு சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகள் மற்றும் சீனாவுடனான உத்தேச சுதந்திர

வர்த்தக உடன்படிக்கைகள் என்பவற்றின் கீழ் அதன் வர்த்தக நலன்கள் குறித்து சமமான முக்கியத்துவத்தினை வழங்கியுள்ளது.

## 3.1 இந்திய – இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (இஸ்ப்ரா)

1998, டிசம்பர் 28 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டு 2000, மார்ச் 1 ஆம் திகதியிலிருந்து அமுலுக்கு வந்த இந்திய - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையானது இரண்டு நாடுகளுக்குமிடையில் மேற்கொள்ளப்படும் வர்த்தகத்தில் பரந்தளவிலான பொருட்களுக்கு தீர்வை விலக்களிப்பினை வழங்கி வருகின்றது. இந்திய - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையானது 2008 நவம்பரிலிருந்து முழுமையாக அமுல்படுத்தப்பட்டுள்ளதுடன் சுங்கத் தீர்வையின்றி இந்திய சந்தைக்கு 4000 இற்கும் அதிகமான உற்பத்தி வரிசைகளை ஏற்றுமதி செய்ய முடிந்துள்ளது.

2014 இல் இந்தியாவுக்கான இலங்கையின் மொத்த ஏற்றுமதிகளின் பெறுமதியானது 624.81 மில்லியன் அ.டொலராக இருந்துள்ள அதேவேளயில், இந்தியாவிலிருந்து இலங்கைக்கான மொத்த இறக்குமதிகளின் பெறுமதியானது 3,977.76 அமெரிக்க மில்லியனாக இருந்துள்ளதுடன் ஏற்றுமதிகளில் 15% அதிகரிப்பும் இறக்குமதிகளில் 29% அதிகரிப்பும் 2013 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் பதிவு செய்யப்பட்டுள்ளன. அதே ஆண்டில் இரண்டு நாடுகளுக்குமிடையிலான மொத்த வர்த்தகமானது 4,602.57 மில்லியன் அமெரிக்க டொலரினை பதிவு செய்துள்ளதுடன் இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 27% இனால் அதிகரித்துள்ளது. இதன் காரணமாக இந்தியாவுடனான இலங்கையின் பாதகமான வர்த்தக மீதியானது 3,352.95 மில்லியன் அமெரிக்க டொலராக இருந்துள்ளது. குறித்த காலப்பகுதியில் இஸ்ப்பராவின் கீழான மொத்த ஏற்றுமதிகள் 540.1 மில்லியன் அ.டொலரினைப் பதிவு செய்துள்ளது.

இலங்கை சுங்கத் திணைக்களத்தின் தரவுகளுக்கிணங்க, 2014 இல் இஸ்ப்பராவின் கீழான இந்தியவுக்கான மொத்த ஏற்றுமதிகள் 375.8 மில்லியன் அ.டொலரினைப் பதிவு செய்துள்ளது. இஸ்ப்ராவின் கீழான தைத்த ஆடைகளின் கோட்டாப் பங்கின் கீழான தைத்த ஆடைகளின் ஏற்றுமதிகள் 2014 இல் 20.6 மில்லியன் அ.டொலரினைப் பதிவு செய்துள்ளது.

## 3.2 பாகிஸ்தான் – இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (PSFTA)

2005 ஜீன் 12 ஆம் திகதியிலிருந்து செயற்பாட்டுக்கு வந்த பாகிஸ்தான் – இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையினத் தொடர்ந்து இரண்டு நாடுகளுக்குமிடையிலான இருதரப்பு வர்த்தகத்தின் பெறுமதியானது கணிசமானளவு மேம்பாட்டினை அடைந்துள்ளது. பாகிஸ்தான் ஆனது, இந்தியாவினால் தலைமை வகிக்கப்படும் சார்க் பிராந்தியத்தில் இலங்கையின் இரண்டாவது மிகப்பெரிய வர்த்தகப் பங்காளியாக இருந்து வந்துள்ளது. பாகிஸ்தானுக்கான இலங்கையின் பிரதான ஏற்றுமதிகளினுள் மிளகு, மரக்கறி உற்பத்திகள், பீடி, இலைகள், வெற்றிலை, தேங்காய் சிரட்டைகள், இயற்கை இறப்பர், தெங்கு மற்றும் புத்தம் புதிய மற்றும் உலர்ந்த மரமுந்திரிகை பருப்புக்கள் என்பனவும் உள்ளடங்குகின்றன. PSFTA இன் அமுலாக்கலின் பின்னர் பாகிஸ்தானிய சந்தைக்கு புதிய உற்பத்திப் பொருட் தொகுதியொன்று

ஊடுருவியுள்ளதுடன் அவை தைத்த ஆடைகள், MDF பலகைகள், பிஸ்கற்கள், புதிய அன்னாசி, விளையாட்டு பொருட்கள், புளி, உண்ணக்கூடிய எண்ணெய், பீங்கான் மேசைப் பொருட்களும் சமயலறைப் பொருட்களும், பீங்கான் தரை ஓடுகள், தளபாடம், மின்சார ஆளிகளும் சொக்கற்றுக்களும், மூலிகை அழகு சாதன பொருட்கள் மற்றும் பிளாஸ்ரிக் பொருட்கள், வர்ணங்கள், கண்ணாடி சித்திரங்கள், தோல் உற்பத்திப் பொருட்கள், குளிரூட்டப்பட்ட மீன், இறால் வகை, கணவாய், நண்டு, வெட்டுப் பூக்கள் மற்றும் இலைத் தொகுதி, இரத்தினக்கற்களும் ஆபரணங்களும் மற்றும் அலங்கார மீன் போன்றவற்றினை உள்ளடக்குகின்றன.

2004 இல் 147 மில்லியன் அமெரிக்க டொலரில் இருந்த இரண்டு நாடுகளுக்குமிடையிலான மொத்த வர்த்தகப் பெறுமதியானது 2014 இல் 353.84 மில்லியன் அமெரிக்க டொலருக்கு அதிகரித்துள்ளது. 2004 இல் 39 மில்லியன் அமெரிக்க டொலரிலிருந்த பாகிஸ்தானுக்காள இலங்கையின் ஏற்றுமதி 2014 இல் 74.25 மில்லியனுக்கு அதிகரித்துள்ளது. பாகிஸ்தானுக்கான ஏற்றுமதியில் வெற்றிலையே பிரதான இடத்தை வகித்து வருகின்றது.
இலங்கை சுங்கத் திணைக்களத்தின் தரவுகளின்படி, 2014 இல் இலங்கையானது 51.78 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியுடைய பொருட்களை பாகிஸ்தானுக்கு ஏற்றுமதி செய்துள்ள அதேவேளையில் இலங்கையானது பிஸ்ப்ராவின் கீழ் 79.12 மில்லியன் பெறுமதியான பொருட்களை இறக்குமதி செய்துள்ளது.

2013 ஏப்பிரலில் நடாத்தப்பட்ட 5 ஆவது தொழில்நுட்ப மட்டத்திலான கூட்டத்தில் ஆணையிடப்பட்டவாறு, தீர்க்கப்படாதுள்ள வர்த்தகத்துடன் தொடர்புடைய விடயங்களுக்குத் தீர்வு காண்பதற்காக இஸ்லாமபாத்தில் 2014 ஒக்டோபர் 20 ஆம் திகதியிலிருந்து 21 ஆம் திகதி வரையில் வர்த்தகம், முதலீடு, சுங்க ஒத்துழைப்பு மற்றும் தன்னியக்க துறை மீதான 1 ஆவது கூட்டு தொழிற்படு குழுக் கூட்டம் நடாத்தப்பட்டது. கூட்டத்தில் சேவை மற்றும் முதலீட்டுத் துறைகளினை உள்ளடக்குவதன் மூலம் பிஸ்ப்பராவினை மேலும் விரிவாக்குவதற்கும் ஸ்திரப்படுத்துவதற்கும் ஆராயப்பட்டது. இந்தக் கூட்டத்தில் இரண்டு தரப்புக்களும் சங்க ஒத்துழைப்பு, வர்த்தகப் பிணக்குகளுக்கு தீர்வு காணுதல், தரிவல்லா தடைகள் மற்றும் சந்தை அணுகுமுறை விடயங்கள் குறித்தும் கலந்துரையாடியுள்ளன.

## 3.3. சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான உத்தேச சுதந்திர வர்த்தக உடன்படிக்கை

முன்னாள் ஜனாதிபதியின் சீன விஜயத்தின் போது, உத்தேச சுதந்திர வர்த்தக உடன்படிக்கையொன்று கலந்துரையாடப்பட்டு அது தொடர்பிலான புரிந்துணர்வு உடன்படிக்கையொன்று இலங்கை வெளி விவகார அமைச்சுக்கும் சீன வர்த்தக அமைச்சுக்குமிடையில் 2013 மே இல் கைச்சாத்திடப்பட்டது.

முன்னாள் நிதி அமைச்சின் செயலாளரின் தலைமையில் முதன்மை முகவராண்மையாக இலங்கை நிதி அமைச்சு இலங்கையின் சார்பில் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டது. அதற்கிணங்க, திறைசேரியின் பிரதி செயலாளரின் தலைமையின் கீழ் வர்த்தக பேச்சுவார்த்தைக்கான குழுவொன்று தாபிக்கப்பட்டது.

வர்த்தகத் திணைக்களத்தின் வர்த்தகப் பணிப்பாளர் நாயகம் உள்ளடங்கலாக வர்த்தக திணைக்களத்தின் விசேட அதிகாரிகள் குழுவின் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்ட அதேவேளையில், உரிய அமைச்சுக்களிலிருந்தான அதிகாரிகள் மற்றும் இரண்டு தனியார் துறையினைச் சேர்ந்த பிரதிநிதிகள் என்பொர் குழுவின் உசாவுலர்களாக உள்ளடக்கப்பட்டிருந்தார்கள். இரண்டு சுற்றுப் பேச்சுவார்த்தைகள் நடாத்தப்பட்டுள்ளதுடன் ஒத்தி வைக்கப்பட்டருந்த மூன்றாவது சுற்றுப் பேச்சுவார்த்தையானது 2015 ஜூனின் இறுதியில் நடாத்தப்படுவதற்கு அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது.

சீனாவுடனான உத்தேச சுதந்திர வர்த்தக உடன்படிக்கையானது, பொருட்களின் வர்த்தகம், சேவைகளின் வர்த்தகம், முதலீடு, சுங்க ஒத்துழைப்பு, வர்த்தகத்திற்கான தொழில்நுட்ப தடைகள், சுகாதார மற்றும் சுகாதார நடவடிக்கைகள் மற்றும் பாதுகாப்பு என்பவற்றினை உள்ளடக்குகின்றது. அதற்கிணங்க, சீனாவுடனான உத்தேச சுதந்திர வர்த்தக உடன்படிக்கையானது விரிவான சுதந்திர வர்த்தக உடன்படிக்கையொன்றாக கருதப்பட வேண்டியுள்ளது. இந்த உடன்படிக்கையினை 2015 இன் நடுப்பகுதியில் நிறைவு செய்வதே இலங்கை நிதி அமைச்சின் எதர்பார்ப்பாகும்.

சீனாவுக்கான முதலாவது சுற்றுப் பேச்சுவார்த்தையானது, சீன ஜனாதிபதியின் விஜயத்தின் போது பொழும்பில் நடாத்தப்பட்டது. பேச்சுவார்த்தைகளின் இரண்டாவது சுற்று 2014 நவம்பரில் சீன, பெஜ்ஜிங்கில் நடாத்தப்பட்டது.

## 3.4. இந்தியா மற்றும் இலங்கைக்கிடையிலான வர்த்தக, முதலீட்டு மற்றும் பொருளாதார விடயங்கள் தொடர்பான இருதரப்பு கலந்துரையாடல்

வர்த்தக செயலாளர் மட்டத்திலான கலந்துரையாடலின் இரண்டாவது சுற்று இந்தியாவின் புதுடில்லி நகரில் 2014 ஜனவரி 23 - 23 வரையில் நடாத்தப்பட்டது. இரண்டு நாடுகளுக்குமிடையிலான பொருளாதார தொடர்புகளை வலுப்படுத்துவதற்கான கட்டமைப்பாக சுதந்திர வர்த்தக உடன்படிக்கை முக்கியத்துவம் பெறுவதனை இரண்டு தரப்புக்களும் புரிந்து கொண்டுள்ளன. இந்தியாவுக்கான இலங்கையின் ஏற்றுமதி ஆற்றலினை மேம்படுத்துவதற்கு இலங்கையில் இந்திய முதலீடுகளின் பங்களிப்பு குறித்து இந்தியா வலியுறுத்தியுள்ளதுடன் பின்வரும் பிரதான விடயங்களில் கூடிய அக்கறையும் செலுத்தப்பட்டது.

- வாகனங்களுக்கான உதிரிப்பாக தயாரிப்பு
- இலகு பொறியியல் பொருட்களின் தயாரிப்பு
- மருந்தாக்கல் பொருட்களின் தயாரிப்பு

சுதந்திர வர்த்தக உடன்படிக்கையானதுவியாபார பண்டங்களுக்கு அப்பாலும் ஆராய்ந்தறிதல் வேண்டுமென்பதுடன் பொருளாதார ஒத்துழைப்பு தொடர்பிலும் கூடிய கவனம் செலுத்த வேண்டிமெனவும் இலங்கை தரப்பு வலியுறுத்தியுள்ளது. மேலும், இந்தியா மற்றும் ஏனைய அயல் நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களில் பாரியளவில் தங்கியிருக்கின்ற தைத்த ஆடைக் கைத்தொழில் தொடர்பில் கூடிய கவனம் செலுத்துவதன் மூலம் இலங்கை

ஏற்றுமதிகளுக்குச் சிறந்த பெறுமதியினை ஏற்படுத்திக் கொடுப்பதற்கான சாத்தியப்பாடுகள் குறித்தும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

## 3.5. பங்களாதேஸுடனான வர்த்தகம் தொடர்பிலான கூட்டு தொழிற்படு குழு

2013 ஏப்பிரல் 22 ஆம் திகதியன்று நடாத்தப்பட்ட இரண்டாவது இலங்கை பங்களாதேஸ் நாடுகளுக்கிடையில் நடாத்தப்பட்ட அலுவலர்களுக்கான உசாவுதல்களின் போது வர்த்தகம் மீதான கூட்டு ஆணைக்குழுவொன்றினை தாபிப்பதனூடாக வர்த்தக உறவுகளை மேம்படுத்துவதற்கான புதிய வழிமுறைகளினைக் கண்டறிய வேண்டுமெனவும் இரண்டு நாடுகளும் தீர்மானித்துக் கொண்டன.

இந்த இரண்டாவது வெளிநாட்டு அலுவலர்களுக்கான உசாவுதலின் தீர்மானத்திற்கமைவாக, வர்த்தகம் மீதான பங்களாதேஸ் - இலங்கை கூட்டு தொழிற்படு குழுவின் முதலாவது கூட்டம் 2014 பெப்ரவரி 18 - 19 வரையில் டாக்காவில் நடாத்தப்பட்டதுடன் கூட்டத்தின் போது இலங்கை மற்றும் பங்களாதேஸுக்கிடையில் நடாத்தப்படும் வர்த்தகத்தினை விரிவாக்குவதற்கான வழிவகைகளினை இனங்காணப்பதற்கும் ஆராய்வதற்கும் சட்டமுறையிலான உடன்படிக்கையொன்றினை தாபிப்பது தொடர்பில் உண்மையைக் கண்டறியும் ஆய்வொன்றினை நடாத்துவதற்கு இரண்டு தரப்புக்களும் உடன்பட்டுக் கொண்டன.

2014 செப்ரெம்பரில் கொழும்பில் நடாத்தப்பட்ட வர்த்தகம் மீதான கூட்டு தொழிற்படு குழுவின் இரண்டாவது கூட்டத்தின் போது வரைபு உண்மையைக் கண்டறியும் வரைபு ஆய்வறிக்கைகள் பாரிமாறிக் கொள்ளப்பட்டதுடன் உரிய மூலதனங்களின் அக்கறைதாரர்களுடனான வரைபினை பூர்த்தி செய்து வலிதாக்குவதற்கும் உடன்பாடு காணப்பட்டது. இந்த ஆய்வுகளை பூர்த்தி செய்ததன் பின்னர் அக்கறைதாரர்களுடன் மற்றும் உள்ளார்ந்த ரீதியான முன்னுரிமை வர்த்தக உடன்படிக்கைகள் / தாராள பொருளாதார உடன்படிக்கைகள் அல்லது ஆரம்பிக்கப்படக்கூடிய வேறு ஏதேனும் நிறுவன ரீதியான முறைமைகள் தொடர்பில் உசாவுதல் மேற்கொள்வதற்கும் உடன்பட்டுக் கொண்டன.

## 3.6. இலங்கை மற்றும் ஜப்பானுக்குமிடையில் அரசாங்கங்களுக்கிடையிலான பொருளாதார கொள்கை உரைகளின் ஆற்றல் மீதான ஒத்துழைப்பு உடன்படிக்கை

இலங்கை மற்றும் ஜப்பான் அரசாங்கங்களுக்கிடையில் அரசாங்கங்களுக்கிடையிலான பொருளாதார கொள்கை உரைகளின் ஆரம்பிக்குகை மீதான புரிந்துணர்வு உடன்படிக்கையொன்று ஜப்பானிய பிரதமர் அதிமேதகு சின்ஸோ ஏப் அவர்கள் இலங்கைக்கு விஜயம் செய்தபோது இலங்கை கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சின் செயலாளர் ஜப்பானிய நாட்டு பொருளாதார, வர்த்தக மற்றும் கைத்தொழில் அமைச்சின் வெளி விவகாரங்களுக்கான துணை அமைச்சரினால் ஜப்பானிய வெளி விவகார அமைச்சின் தென் மேற்கு மற்றும் தென் கிழக்கு விவகார திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்துடன் இணைந்து2014 செப்ரெம்பர் 07 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டது.

## 4.0 வர்த்தகம் பொருளாதாரம் மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு மீதான கூட்டு ஆணைக்குழு

வர்த்தக திணைக்களமானது, அமைச்சர்கள் மட்டத்தில் நடாத்தப்பட்ட பின்வரும் இருதரப்பு கூட்டு ஆணைக்குழுக்கள்/ குழுக்களின் கீழான வர்த்தகத்துடன் தொடர்புடைய வியடங்களுக்குப் பொறுப்பு வாய்ந்ததாகும்.

- இலங்கை – பங்களாதேஸ்
- இலங்கை – எகிப்து
- இலங்கை – ஈரான்
- இலங்கை – மாலைதீவு
- இலங்கை – ஈராக்
- இலங்கை – கென்யா
- இலங்கை – ஐக்கிய அமெரிக்கா
- இலங்கை – இந்தியா
- இலங்கை – குவைற்
- இலங்கை – பாகிஸ்தான்
- இலங்கை – பெலாரஸ்
- இலங்கை – கட்டார்

### 4.1. இலங்கை மற்றும் ஈரானுக்குமிடையிலான பொருளாதார ஒத்துழைப்புக்கான கூட்டு ஆணைக்குழுவின் பத்தாவது கூட்டம்

ஈரான் இஸ்லாமியக் குடியரசுக்கும் இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசுக்குமிடையிலான பொருளாதார ஒத்துழைப்புக்கான கூட்டு ஆணைக்குழுவின் பத்தாவது அமர்வு 2015 ஜனவரி 14-15 வரையில் தெஹிரானில் நடாத்தப்பட்டது.

இலங்கைத் தூதுக்குழுவுக்கு இலங்கை கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர், கௌரவ றிசாட் பதியுதீன் அவர்களும் ஈரானிய தூதுக்குழுவுக்கு ஈரானின் கைத்தொழில், சுரங்கமறுத்தல் மற்றும் வர்த்தக அமைச்சர் கௌரவ ரேஷாநேமத் ஷெடே அவர்களும் தலைமை தாங்கினார்கள்.

பொருளாதார ஒத்துழைப்புக்கான கூட்டு ஆணைக்குழுவின் கூட்டத்தின் போது, இருதரப்பு முக்கியத்துவம் வாய்ந்த வர்த்தக பொருளாதாரம் மற்றும் சுங்கம், வங்கித்துறை, போக்குவரத்து மற்றும் நிருமாணம், மின்சக்தியும் வலுவும் மற்றும் சுற்றுலாக்கல்வி, சுகாதாரம் மற்றும் கலாச்சாரம் போன்றவற்றுடன் தொடர்புடைய விடயங்களில் தமது கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டார்கள்.

### 4.2. ஈராக்கிற்கும் இலங்கைக்குமிடையிலான பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்புக்கான கூட்டு ஆணைக்குழுவின் எட்டாவது அமர்வு

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அரசாங்கத்திற்கும் ஈராக் குடியரசு அரசாங்கத்திற்குமிடையிலான பொருளாதார, விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு மீதான உடன்படிக்கைக்கமைவாக, பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்புக்கான இலங்கை - ஈராக் கூட்டு ஆணைக்குழுவின் எட்டாவது அமர்வு 2014 பெப்ரவரி 24 ஆம் திகதியிலிருந்து 25 அம் திகதி வரையில் ஈராக்கின் பக்தாத் நகரில் நடாத்தப்பட்டது.

இலங்கையின் கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் கௌரவ றிசாட் பதியுதீன் அவர்கள் இலங்கைத் தூதுக்குழுவுக்கும், ஈராக் குடியரசின் வர்த்தக அமைச்சர் மேன்மைதங்கிய கலாநிதி. கரியுல்ல ஹசன் பார்க்கர் அவர்கள் ஈராக்கிய தூதுக்குழுவுக்கும் தலைமை தாங்கினார்கள்.

இக்கூட்டத்தின் போது, இரண்டு நாடுகளுக்கும் முக்கியத்துவம் பெறுகின்ற துறைகளான வர்த்தகம், நிதி, வங்கியியல், வரி விதிப்பனவு, முதலீடு, விவசாயம், போக்குவரத்து, தொழில் சந்தை, சுற்றுலா, கலாச்சாரம் மற்றும் முதலீடுகள் போன்ற துறைகள் குறித்தும் கருத்துக்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டன.

## 4.3. பொருளாதார, வர்த்தக மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு மீதான இலங்கை கட்டார் கூட்டு ஆணைக்குழுவின் முதலாவது கூட்டம்

கட்டார் இராஜ்ஜிய அரசாங்கத்திற்கும் இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அரசாங்கத்திற்குமிடையிலான கட்டார் - இலங்கை கூட்டு பொருளாதார ஆணைக்குழுவின் முதலாவது அமர்வு 2014 செப்ரெம்பர் 14 - 15 வரையில் டோஹாவில் நடாத்தப்பட்டது.

கட்டார் அரசாங்கத்தின் தூதுக்குழுவிற்கு பொருளாதார மற்றும் வர்த்தக அமைச்சர் மேன்மைதங்கிய செயிக் அஹமட் பின் ஜசெம் பின் மொஹமட் அல் தானி அவர்களும் இலங்கையின் கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் கௌரவ றிசாட் பதியுதீன் அவர்கள் இலங்கைத் தூதுக்குழுவிற்கும் தலைமை வகித்தார்கள்.

வர்த்தகம் மற்றும் முதலீடு, விவசாயம் மற்றும் உணவுக் கைத்தொழில், கலாச்சாரமும் கலையும் மற்றும் கல்வி போன்ற பரஸ்பரம் நன்மையளிக்கக்கூடிய தலைப்புக்களில் கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டன. கட்டார் தரப்பானது பல்கலைக்கழக நகரமயமாக்கல் நிகழ்ச்சித்திட்டத்துக்கு நிதி உதவுகையினை மேற்கொள்வதற்கான சாத்தியப்பாடு குறித்து ஆராய்வதற்கும் இரண்டு தரப்பும் இணங்கிக் கொண்டன. கட்டாரிலுள்ள பொதுப் பணி அதிகாரசபையானது கட்டாரில் உள்ளக கட்டமைப்பு கருத்திட்டங்களை மேற்கொள்வதற்காக இலங்கையர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளது.

## 4.4. முதலாவது இலங்கை - பெலாரஸ் கூட்டு பொருளாதார ஒத்துழைப்பு

இலங்கைக்கும் பெலாரசுக்குமிடையில் இரண்டு நாடுகளுக்குமிடையிலான இருதரப்பு வர்த்தக மற்றும் பொருளாதார உறவுகளை மேலும் வலுப்படுத்தும் நோக்குடன் வர்த்தக மற்றும் பொருளாதார உடன்படிக்கையொன்று, இலங்கையின் அதிமேதகு ஜனாதிபதி அவர்கள் 2013 ஆகஸ்டில் பெலாரசுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்ட போது கைச்சாத்திடப்பட்டது. அடுத்த கட்ட நடவடிக்கையாக கொழும்பில் 2014 ஜூலை 9 மற்றும் 10 ஆம் திகதிகளில் இலங்கை - பெலாரஸ் கூட்டுப் பொருளாதார ஒத்துழைப்பு தொடர்பான முதலாவது கூட்டம் நடாத்தப்பட்டது.

இருதரப்பு பேச்சுவார்த்தைகளின் போது, இரண்டு தரப்புக்களும் பரஸ்பர பயன்களுக்கான வர்த்தக மற்றும் வியாபார உறவுகளை மேபடுத்துவதற்கும் அவற்றினை வலுவூட்டுவதற்குமான புதிய வழிமுறைகளைக் கண்டறிவது குறித்து உடன்பட்டுக்

கொண்டன. மேலும், பெலாரஸிய தரப்பானது இலங்கையில் உழவு இயந்திர ஒருங்கிணைப்பு பொறித் தொகுதியொன்றினை தாபிப்பதற்கான செயல்முறையில் ஈடுபட்டு வருகின்றது.

முதலாவது இருதரப்பு பேச்சுவார்த்தைகளின் விளைவாக, பெலாரஸிய அரசாங்கமானது 2014 நவம்பர் 26 இலிருந்து வலுவுக்கு வரும் வகையில் இலங்கையினை கரை கடந்த நாடுகளின் பட்டியலிலிருந்து நீக்கியுள்ளது. இந்த நீக்குகையின் நேரடிப் பயனாக இலங்கை ஏற்றுமதியாளர்கள் இலங்கைக்கான அவர்களின் ஏற்றுமதி சம்பாத்தியங்களின் அனுப்புதல்களின் மீதான 15% வரிக் கொடுப்பனவினை இனிமேல் செலுத்த வேண்டியதில்லை.

### 4.5. இலங்கை மற்றும் வியட்னாமுக்கிடையிலான வர்த்தகம் மீதான உப குழுவின் வரையறைகள் மீதான கூட்டம்

கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர், கௌரவ றிசாட் பதியுதீன் அவர்கள் இரண்டு நாடுகளுக்குமிடையில் வர்த்தகம் மீதான கூட்டு உப குழுவொன்றினை தாபிப்பதுடன் தொடர்புடைய வரையறைகள் குறித்து கலந்துரையாடுவதற்காக உத்தியோகபூர்வ தூதுக் குழுவொன்றுடன் இணைந்து 2014 ஆகஸ்ட் 21 மற்றும் 22 ஆம் திகதிகளில் வியட்னாமிற்கு விஜயம் மேற்கொண்டுள்ளார்.

அவரது விஜயத்தின் போது, இரண்டு நாடுகளும் வர்த்தகம் மற்றும் கைத்தொழில் தொடர்பான துறைகளினை மேலும் மேம்படுத்துவதற்கான புதிய வழிமுறைகள் குறித்து கண்டறிதல் மற்றும் இருதரப்பு உறவுகளை நிலையாகப் பேணுதல் போன்ற நோக்கங்களுக்காக இலங்கைகும் வியட்னாமிற்குமிடையில் வர்த்தகம் மீதான உப குழுவொன்றினைத் தாபிப்பதற்கு உடன்பட்டுக் கொண்டன. மேலும், வர்த்தகம் மீதான உப குழுவின் முதலாவது அமர்வினை கூடிய விரைவில் நடாத்துவதற்கும் உடன்பட்டுக் கொண்டன.

### 4.6. ஐக்கிய அமெரிக்கா - இலங்கை வர்த்தக மற்றும் முதலீட்டு சட்டரீதியான உடன்படிக்கையின் (TIFA) கீழான கூட்டுப் பேரவை கூட்டத்தின் 11 அவது அமர்வு

ஐக்கிய அமெரிக்கா - இலங்கை வர்த்தக மற்றும் முதலீட்டு சட்டரீதியான உடன்படிக்கையின் கீழான பேரவை கூட்டத்தின் 11 ஆவது அமர்வானது அவற்றின் பேச்சுவார்த்தைகளை தொடர்ந்தும் நடாத்துவதற்கும் அது தொடர்பான முன்னேற்றங்களை மதிப்பீடு செய்வதற்கும் 2014 ஒக்டோபர் 15 ஆம் திகதியன்று நடாத்தப்பட்டது. இரண்டு தரப்பும் சந்தை அணுகுமுறை, ஐக்கிய அமெரிக்க முன்னுரிமைகளின் பொதுவான முறைமை, தொழில், வர்த்தக ஊக்குவிப்பு முயற்சிகள், புலமைச் சொத்து உரிமைகள், விவசாயம் மற்றும் துறை ரீதியான முதலீட்டு சவால்கள் என்பன உள்ளடங்கலான வர்த்தக மற்றும் முதலீட்டு விடயங்கள் குறித்து கலந்துரையாடியுள்ளன. இத்தகைய வர்த்தக மற்றும் முதலீட்டு விடயங்களில் ஏற்படும் முன்னேற்றமானது பொருளாதார அபிவிருத்தி உள்ளடங்கலான அனைத்து விடயங்களிலும் உறுதியான அடித்தளத்தினை இடுவதற்கு வழிவகுக்கும்.

இலங்கை வர்த்தக மற்றும் முதலீட்டு சட்டரீதியான உடன்படிக்கை செயல்முறையானது தனியார் மற்றும் அரச துறைகளுக்கிடையிலான பேச்சுவார்த்தைகளை ஊக்குவிப்பதுடன் தனியார் - அரசாங் பங்குடைமை மாநாடுகளை, வியாபார வாய்ப்பளிக்கும் நிகழ்வுகள் மற்றும் TIFA இன் உத்தியோகபூர்வ கூட்டங்களில் முதலீடு தொடர்பான கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வதற்கும் வசதியளிக்கின்றது.இந்த முறையினைத் தொடர்ந்து, ஐக்கிய அமெரிக்க - இலங்கை வியாபார கருத்தரங்கானது 2014, ஒக்டோபர் 16 அம் திகதியன்று இலங்கை வர்த்தக மன்றத்தில் நடாத்தப்பட்டதுடன் ஐக்கிய அமெரிக்க உணவு மற்றும் ஔடத நிருவாகம், இலங்கை தூதரகம், வர்த்தக திணைக்களம் மற்றும் ஏற்றுமதி அபிவிருத்திச் சபை ஆகியவற்றுடன் ஒன்றிணைந்து 2014 டிசம்பர் 10 ஆம் திகதியன்று உணவு மற்றும் ஔடத நிருவாகம் தொடர்பில் வீடியோ மாநாடு ஒன்றும் நடத்தப்பட்டது.

## 4.7. கென்யா மற்றும் இலங்கைக்கிடையிலான கூட்டு வர்த்தக குழுக் கூட்டம் மீதான முதலாவது அமர்வு

இரண்டு நாடுகளுக்குமிடையிலான வர்த்தக உறவுகளை மேலும் விரிவாக்கும் நோக்குடன் முன்னாள் அதிமேதகு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸ அவர்களினால் கென்யாவுக்கு மேற்கொள்ளப்பட்ட விஜயத்தின் போது கைச்சாத்திடப்பட்ட இலங்கை - கென்யாவுக்குமிடையிலான இருதரப்பு வர்த்தகம் மீதான புரிந்துணர்வு உடன்படிக்கையொன்றின் மூலம் இலங்கை மற்றும் கென்யாவுக்குமிடையில் கூட்டு வர்த்தக குழுவொன்று தாபிக்கப்பட்டது. இது தொடர்பில், இலங்கை மற்றும் கென்யாவுக்குமிடையிலான கூட்டு வர்த்தக குழுவின் முதலாவது கூட்டம் கொழும்பில் 2014, நவம்பர் 11 இல் நடாத்தப்பட்டது. கூட்டத்தின் போது இரண்டு தரப்பும் ஒத்துழைப்பு நல்க வேண்டிய விடயங்கள் குறித்தும் கலந்துரையாடியுள்ளன.

கூட்டத்தின் போது இலங்கை தரப்பானது, இரண்டு நாடுகளின் சுங்கங்களுக்குமிடையில் புரிந்துணர்வு உடன்படிக்கையொன்றினைக் கைச்சாத்திடுவதன் மூலம் சுங்க ஒத்துழைப்பினை வலுப்படுத்திக் கொள்ள முடியமென ஆலோசனை வழங்கியுள்ளதுடன் இரண்டு ஏற்றுமதி ஊக்குவிப்பு முகவராண்மைகளுக்கிடையில் புரிந்துணர்வு உடன்படிக்கையொன்றினைக் கைச்சாத்திடுதல், இரண்டு நாடுகளின் வர்த்தக மன்றங்களுக்கிடையேயான ஒத்துழைப்புக்களை குறிப்பாக இளம் தொழில் முயற்சியாளர்கள் கூட்டமைப்புக்ளுக்டையிலான உறவுகளை வலுப்படுத்துதல், இரண்டு நாடுகளுக்குமிடையில் நடாத்தப்படும் வர்த்தக சந்தைகளில் பரஸ்பரம் கலந்து கொள்ளுதல், தேசிய இறக்குமதி மற்றும் ஏற்றுமதி வர்த்தக புள்ளிவிபரங்கள் மற்றும் வரியல்லா தரிவு முறைகள் குறித்த தரவுகளைப் பரிமாறிக் கொள்ளுதல், வர்த்தகம் மற்றும் கைத்தொழில் தொடர்பான விடயங்கள் தொடர்பான தகவல்கள் அல்லது விளக்கமளித்தல்கள் கோருவதற்கான முக்கிய விடயங்களை இனங்காணுதல் மற்றும் நிருமாணத் துறையில் ஒத்துழைப்பினை வழங்குவது தொடர்பிலும் ஆராயப்பட்டது.

கென்ய தரப்பானது தொழில்நுட்ப பகிர்ந்து கொள்ளல் நியதிகளின்படி தேயிலைத்துறையில் ஒத்துழைப்பு, முதலீட்டு வாய்ப்புக்கள் மற்றும் தொழில்நுட்ப பகிர்வு நியதிகளின்படி தெங்குத்துறையில் ஒத்துழைப்பு, கால்நடைத் துறையில் ஒத்துழைப்பு, இலங்கைக்கான பாற் பண்ணை உற்பத்திகளின் வியாபாரத்தில், கோழி வளர்ப்பு தொடர்பில் துறை ரீதியான

ஆராய்ச்சியும் தொழில்நுட்ப பகிர்வும், சுற்றுலாத்துறையில் ஒத்துழைப்பு மற்றும் துறையில் சிறியளவிலான முதலீட்டு வாய்ப்புக்களின் மூலமான தோல் மற்றும் தோல் உற்பத்திப் பொருட்களில் ஒத்துழைப்பினை வழங்குவதற்கு ஆலோசனை வழங்கியுள்ளது.

## 5.0 பலதரப்பு வர்த்தக உறவுகள்

இலங்கையின் பலதரப்பு வர்த்தக உறவுகள் உலக வர்த்தக நிறுவனத்தின் (WTO) மீது கூடிய அக்கறையினைக் காட்டியுள்ளன. இலங்கையானது வர்த்தகம் மற்றும் அபிவிருத்தி மீதான ஐக்கிய நாடுகள் மாநாடு (UNCTAD), உலக புலமைச் சொத்துக்கள் நிறுவனம் (WIPO), சர்வதேச வர்த்தக நிலையம் (ITC) மற்றும் WTO சட்டவிதிக்கான மதியுரை நிலையம் (ACWL) ஆகியவற்றுடன் நெருங்கிய தொடர்புகளைப் பேணி வருகின்றது.

### 5.1 உலக வர்த்தக நிறுவனம்

2014 இல், உலக வர்த்தக நிறுவனத்தின் உறுப்பினர்கள் 2013 இன் இறுதியில் இடம்பெற்ற 10 ஆவது அமைச்சர்கள் மட்டத்திலான மாநாட்டில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள பின்பற்றுவது தொடர்பில் கூடிய கவனம் செலுத்தினார்கள்.உறுப்பினர்களின் கவனமானது சட்டரீதியான உடன்படிக்கையினை துரிதமாக அமுல்படுத்துவது உள்ளடங்கலான வர்த்தக வசதிப்படுத்தல் மீதான உடன்படிக்கையினை எதிர்பார்க்கப்பட்டவாறு அமுல்படுத்துவது தொடர்பானதாக அமைந்திருந்ததுடன் இத்தகையஉறுப்பினர்களின் கவனத்திற்கு கொண்டு வரப்படும் ஏற்பாடுகள் இந்த உடன்படிக்கையினை அவர்கள் அமுல்படுத்துவதற்கு உதவியாக அமைந்திருந்தன. 2014 இன் இறுதி உறுதிப்படுத்தலுக்கான உலக வர்த்தக நிறுவனத்திற்கான ATF இனைக் கூட்டிணைக்கும் மரபுச் சீர்முறையானது2015 ஜூலை 31 வரையில் திறக்கப்பட்டிருந்தது.

வர்த்தக வசதிப்படுத்தல் உடன்படிக்கையின் கீழ் இலங்கையின் ஆரம்ப அறிவித்தலினைத் தயாரிப்பதற்காக, வர்த்தக திணைக்களம் மற்றும் இலங்கைச் சுங்கம் என்பன உரிய முகவராண்மைகள் மற்றும் நிதி அமைச்சு, சுகாதார அமைச்சு, விவசாய திணைக்களம், இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டுத் திணக்களம் போன்ற வரிசை அமைச்சுக்களுடன் இணைந்து செயற்படுகின்றன.மேலும், வர்த்தக திணைக்களமானது உடன்படிக்கையின் ஏனைய எற்பாடுகளை அமுல்படுத்துவதிலுள்ள இடர்பாடுகளை நிர்ணயிப்பதற்கு உரிய அதிகாரிகளுடன் 2015 ஆம் ஆண்டுக்கான உலக வங்கியிடமிருந்தான தூதுக்குழுவொன்றினை ஒழுங்கமைப்பதிலும் தேவைப்படும் தொழில்நுட்ப /அல்லது நிதிசார் உதவுகைக்கான விடயங்களை அடையாளங் காண்பதிலும் ஜெனிவாவிலுள்ள நிரந்தரத் தூதுக்குழுவுடன் இணைந்து தயார்ப்படுத்தல் வேலைகளில் ஈடுபட்டது.

உறுப்பினர்கள், 2009 இல் நிறுவப்பட்ட டோஹா அபிவிருத்திச் சுற்றுப் பேச்சுவார்த்தைகள் மீதான வேலைத்திட்டமொன்றினைத் தயாரிப்பது தொடர்பான வேலைகளில் தொடர்ந்தும் ஈடுபட்டார்கள். இது விவசாயம், நாமா, மற்றும் சேவைகள் போன்ற முக்கிய விடயங்களில் பேச்சுவார்த்தைகளினை எவ்வாறு முன்னெடுப்பது என்பது தொடர்பில் இடம்பெற்று முறையான கலந்துரையாடல்கள் மற்றும் உசாவுதல்கள் என்பவற்றினையும்

உள்ளடக்குகின்றது. எவ்வாறாயினும், சில உறுப்பினர்கள் இறுதியாக உடன்பாடு காணப்பட்ட நிலைகளிலிருந்து பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட வேண்டுமென கோரியுள்ள அதேவேளையில் ஏனையார் 2009 இல் காணப்பட்ட இறுக்கமான நிலைமையினை தவிர்ப்பதற்கு “புதிய அணுகுமுறைகள்” இனைக் கவனத்தில் கொள்ளுமாறும் கோரிக்கை விடுத்துள்ளனர். இலங்கையானது, விவசாயம் மற்றும் விவசாயமல்லாதவை உள்ளடங்கலான இலங்கையானது முக்கியத்துவம் கொடுக்கின்ற விடயங்களில் இடம்பெற்ற பல்வேறு கலந்துரையாடல்களில் ஆர்வத்துடன் பங்குபற்றியது.

2014 ஆம் ஆண்டு காலப்பகுதியில், திணைக்களத்தின் பல்தரப்புப் பிரிவானது உலக வர்த்தக நிறுவனத்துடன் இணைந்து இரண்டு தொழில்நுட்ப உதவுகையினை ஒருங்கிணைத்துள்ளது. அவற்றுள் ஒன்று சுகாதார மற்றும் சுகாதார நடைமுறைகள் மீதான உடன்படிக்கை மற்றையது புலமைச் சொத்துக்களுடன் தொடர்புடையது. SPS கருத்தரங்கானது அரச மற்றும் தனியார் துறைகளிலிருந்தான பங்குபற்றாளர்களுக்கு SPS உடன்படிக்கை தொடர்பான விளக்கத்தினையும், அதன் அமுலாக்கம் மற்றும் உடன்படிக்கையின் கீழான உரிமைகள் மற்றும் கடப்பாடு மற்றும் SPS நடவடிக்கைகள் தொடர்பில் இலங்கை போன்ற அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுடன் தொடர்புடைய விடயங்கள் குறித்த விபரங்களையும் வழங்குகின்றது. அத்துடன், உலக வர்த்தக நிறுவனத்திலிருந்தான தொழில்நுட்ப தூதுக்குழுவானது, புவியியல் குறிகாட்டியாக இலங்கை கறுவா தொடர்பான அளவொன்றினை தயாரிப்பதில் இலங்கை ஏற்றுமதி சபைக்கு உதவியளிப்பதற்கான ஒருங்கிணைப்பினையும் ஏற்படுத்தியுள்ளது.

## 5.2 வர்த்தக முன்னுரிமைகளின் பூகோள முறைமை (GSTP)

வர்த்தக முன்னுரிமைகளின் பூகோள முறைமை தொடர்பான உடன்படிக்கையானது, அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கிடையில் 1989 இல் தாபிக்கப்பட்டது. GSTP ஆனது தெற்கு – தெற்கு வர்த்தக மற்றும் பொருளாதார ஒத்துழைப்பினை அதிகரிக்கும் நோக்குடன் வர்த்தகம் மற்றும் அபிவிருத்தி மீதான ஐக்கிய நாடுகள் மாநாட்டின் (UNCTAD) கீழ் பேச்சுவார்த்தை நடாத்தப்பட்ட தரிவு முன்னுரிமை முறைமையாகும். இத்திட்டத்தின் கீழ் இலங்கையானது, குறித்த ஆண்டு காலப்பகுதியில், 19.17 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியுடைய பொருட்கள் மெக்ஸிக்கோவுக்கும் பெருவுக்கும் செய்துள்ளது.

## 5.3. முன்னுரிமைகளின் பொதுவான முறைமை (GSP)

### (அ) EU GSP முறைமை

ஐரோப்பிய ஆணைக்குழு மற்றும் ஐரோப்பிய பாராளுமன்றம் என்பன 2014.01.01 இலிருந்து பயனுறுதியான புதிய ஜீஎஸ்பி இக்கு அங்கீகாரத்தினை வழங்கியுள்ளது. புதிய திட்டத்தின் நோக்கங்கள் பின்வருமாறு:

- நாட்டிற்குத் தேவையானவை குறித்து கூடிய கவனம்;

- நிலையான அபிவிருத்தி மற்றும் நல்லாட்சி ஆகியவற்றின் முதன்மைக் கோட்பாடுகளை மேலும் மேம்படுத்துதல்;
- சட்ட உறுதிப்பாட்டினையும் நிலையான தன்மையினையும் அதிகரித்தல்.

இந்தப் புதிய திட்டத்தின் கீழ், இலங்கையானது புதிய திட்டத்தின் கீழ் ஜீஎஸ்பி முன்னுரிமை நியமங்களுக்கான நன்மைகளைத் தொடர்ந்தும் பெற்று வருகின்றது.

EU GSP திட்டத்தின் குறுக்குப் பிராந்திய திரண்ட ஏற்பாட்டின் கீழ், இலங்கையானது தயாரிக்கப்படாத புகையிலை மற்றும் இந்தோனேசியாவனை மூலாதாரமாகக் கொண்ட எச்எஸ் தலைப்பு 2401 இனை கழிவு புகையிலை ஆகியவற்றின் திரண்டவைக்கும் உரித்துடையதாயுள்ளது.

### (அ) நோர்வே GSP+ திட்டம்

நோர்வே அரசாங்கமானது 2013 ஜனவரி1 ஆம் திகதியிலிருந்து அமுலுக்கு வரும் வகையில் புதிய ஜீஎஸ்பிபிளஸ் (GSP+) திட்டத்தினை அறிமுகப்படுத்தியுள்ளதுடன் இலங்கை உள்ளடங்கலான பதினேழு நாடுகள் இந்த வசதியின் கீழான பயன்களைப் பெறுவதற்கு உரித்துடையவர்களாவர். இலங்கையானது நோர்வேயின் ஜீஎஸ்பி வசதியினை 1972 ஆம் ஆண்டிலிருந்து அநுபவித்து வருகின்றதுடன் 2013 இலிருந்து புதிய ஜீஎஸ்பி + தகுதிநிலையினை அநுபவிப்பதற்கான தகைமையினை அடைந்திருந்தது.

புதிய ஜீஎஸ்பி + வசதியானது நோர்வேக்கு பூச்சிய தீர்வையில் ஏற்றுமதி செய்யப்படும் இலங்கையின் ஏற்றுமதிப் பொருட்களுக்கும் கிடைக்கப் பெறுவதுடன் நேர்வேக்கான சுங்கத் தீர்வையற்ற சந்தை அணுகுமுறைகையும் உருவாக்குகின்றது. புதிய ஜீஎஸ்பி + தகைமையானது அத்தியாயம் 61, 62, மற்றும் 63 இன் கீழான அனைத்து புடவைகளுக்கும் 100% சுங்கத் தீர்வையற்ற அணுகுமுறையினை திறந்து வைத்துள்ளது.

## 6.0 பிராந்திய பொருளாதார ஒத்துழைப்பு

இலங்கையானது அதன் பிராந்திய வர்த்தகம் மற்றும் APTA, SAPTA, SAFTA, BIMSTEC மற்றும் IORA எனும் பெயருடைய பொருளாதார ஏற்பாடுகளில் தொடர்ந்தும் பிரதான பாத்திரத்தினை வகித்து வருகின்றது.

### 6.1 ஆசிய பசுபிக் வர்த்தக உடன்படிக்கை(APTA)

முன்னர் பாங்கொக் உடன்படிக்கை என அழைக்கப்பட்ட ஆசிய பசுபிக் வர்த்தக உடன்படிக்கையானது (APTA) 2005 நவம்பர் 2 அம் திகதி கைச்சாத்திடப்பட்டுள்ளதுடன் அது 2006 செப்ரெம்பர் 1 ஆம் திகதியிலிருந்து அமுலுக்கு வந்தது.

இலங்கையானது அப்ராவின் 43, 44 மற்றும் 45 ஆவது நிலையியல் குழு கூட்ட அமர்வுகளில் முறையே 2014 மே, ஜூலை மற்றும் நவம்பரில் வெற்றிகரமாக பங்குற்றியுள்ளது. அங்கத்துவ

நாடுகள் தாய்லாந்து, பாங்கொக்கில் 2015 இன் முதல் அரையாண்டில் நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ள அப்ரா அமைச்சர்கள் மட்டத்திலான பேரவையின் 4 ஆவது அமர்வின் போது அப்ராவின் கீழான 4 ஆவது சுற்றுப் பேச்சுவார்த்தையினை நிறைவு செய்வதற்கு தீர்மானித்திருந்தார்கள்.

நிலையியல் குழுக் கூட்டங்களில் கவனத்தில் கொள்ளப்படும் பிரதான விடயங்களினுள் வரிச் சலுகைகள் மீதான கலந்துரையாடல்கள், மூலவிதிகளைத் தளர்த்துதல், வர்த்தக வசதிப்படுத்தல், முதலீடு மற்றும் சேவைகள் மீதான சட்டரீதியான உடன்படிக்கையின் அமுலாக்கதிற்கான முன்னெடுப்பு தொடரபான கலந்துரையாடல்கள் உள்ளடங்கியிருந்தன.

அப்ரா வியாபார மாநாடானது அப்ராநிலையியல் குழுவின் 45 ஆவது அமர்வுடன் இணைந்து நடாத்தப்பட்டது. இந்த மாநாட்டின் பிரதான நோக்கம் அப்ராவின் எதிர்கால முன்னெடுப்பினை மேலும் விருத்தி செய்வதற்கான தேவை குறித்து அப்ரா தனியார் துறைக்கிடையே ஒற்றுமையினைக் கட்டியெழுப்புவதாக அமைந்திருந்தது.

2014 இன் முதல் காலாண்டு காலப்பகுதியில், அப்பரா அங்கத்துவ நாடுகளுக்கான மொத்த ஏற்றுமதிகள் 44.3 மில்லியன் அமெரிக்க டொலர்களாக இருந்துள்ளதுடன் அவற்றுள் சீனாவுக்கு 33 மில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான பொருட்கள் எற்றுமதி செய்யப்பட்டன.

## 6.2. தென்னாசிய முன்னுரிமை வர்த்தக உடன்படிக்கை

1985 இல் தாபிக்கப்பட்ட சார்க் அமைப்பானது ஆரம்பத்தில் சுகாதாரம், சனத்தொகை, அளவீட்டுஇயல், தொலைத்தொடர்பு, விளையாட்டுத்துறை, கலாச்சாரம் போன்ற இலகுவான விடயங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. 1988 டிசம்பரில் நடாத்தப்பட்ட நான்காவது சார்க் மாநாட்டில், சார்க் சட்ட வரையறையினுள் உறுதியானதும் பெறுபேறுகளை நோக்கியதுமான நடவடிக்கைகள் குறித்து வலியுறுத்தப்பட்டது. அதற்கிணங்க, சார்க் நாடுகளுக்கிடைய சுதந்திரமான வர்த்தகம் குறித்த யோசனையானது 1991 டிசம்பரில் கொழும்பில் நடாத்தப்பட்ட ஆறாவது சார்க் மாநாட்டில் இலங்கையினால் முதன் முறையாக முன்வைக்கப்பட்டது.தென்னாசிய முன்னுரிமை வர்த்தக உடன்படிக்கையானது (SAPTA) 1993 ஏப்பிரல் 11 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டு 1995, 7 ஆம் திகதியன்று அமுலுக்கு வந்தது. உடன்படிக்கையானது, வரிச் சலுகைப் பரிமாற்றங்களினூடாக சார்க் பிராந்தியத்தினுள் பரஸ்பர வர்த்தக மற்றும் பொருளாதார ஒத்தழைப்பினை மேம்படுத்துவதற்கான அங்கத்துவ நாடுகளின் விருப்பத்தினை பிரதிபலிக்கின்றது.

சுங்கச் சங்கமொன்றினை நோக்கியதான முன்னணி அமைப்பாக தென்னாசிய சுதந்திர வர்த்தக பிரதேசத்தினை மாற்றியமைப்பதே SAPTA இன் முதன்மை நோக்கமாக, அமைந்திருந்தது. எனவே, SAPTA ஆனது எதிர்காலத்தில் தென்னாசிய சுதந்திர வர்த்தக பிரதேசத்தினால் படிப்படியாக அகற்றப்படும். ஆகையால்SAPTA இன் கீழான வர முன்னுரிமைப் பயன்பாடானது வருடாந்தம் குறைவடைந்து வருகின்றது. 2014 ஆம் ஆண்டு

காலப்பகுதியில், இலங்கையானது SAPTA இன் கீழ் இந்தியா மற்றும் பாகிஸ்தான ஆகிய நாடுகளுக்கு 3.34 மில்லியன் பெறுமதியான பொருட்களை ஏற்றுமதி செய்திருந்தது.

குறைவிருத்தி நாடுகளுக்கான SAPTA வரிச்சலுகைகளினைப் பேணுகின்ற விடயம் தொடர்பில், குழுவானது குறைவிருத்தி அங்கத்துவ நாடுகளுக்கான வர்த்தக சுதந்திர நிகழ்ச்சித்திட்டத்தினைப் பூர்த்தி செய்கின்ற குறைவிருத்தியல்லா நாடுகளினை ஏற்றுக் கொண்டுள்ளதுடன், SAPTA வரிச்சலுகைகள் குறைவிருத்தி நாடுகளுக்கு நிறுத்தப்படும். எவ்வாறாயினும், குறைவிருத்தியல்லா நாடுகளின் நெகிழ்வுப் பட்டியல்களில் தோன்றுகின்ற, குறைவிருத்தி நாடுகளுக்கு கிடைக்கக்கூடிய SAPTA வரிச்சலுகைகள் தொடர்பிலான ஏதேனும் பொருள் இருப்பின், அவை பெறுமதி குறைந்த அதே வரிச் சலுகை மட்டத்தினைப் பேணும். குழுவானது, SAPTA இன் கீழான தரிவு முன்னுரிமைகளை அனுபவிக்கின்ற வர்த்தக சுதந்திரமளித்தல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழான பொருட்களாயின், மேலும் உடன்பட்டுக் கொண்டதுடன், குறைவிருத்தியல்லா நாடுகள், வர்த்தக சுதந்திரமளித்தல் நிகழ்ச்சித்திட்டத்திற்கான அடிப்படை வீதத்திற்காக உடன்பட்ட திகதி மீது SAPTA இன் கீழான குறைவிருத்தி நாடுகளுக்கு ஏற்புடைய வீதத்திற்கும் மேற்படாத வீதத்திற்கு அத்தகைய பொருட்களின் மீதான தரிவினை குறைக்கும்.நெகிழ்வுத் தன்மையுடைய பட்டியல்களிலுள்ள அல்லது இல்லாத பொருட்களாகவிருந்தாலும் வர்த்தக சுதந்திரமளிப்பு நிகழ்சித்திட்டத்தின் கீழான வரிச் சலுகைளினைப் பேணுதல் வேண்டுமென முதலாவது SAPTA அமைச்சர்கள் மட்டத்திலான பேரவயின் கூட்டத்தில் உடன்பாடு காணப்பட்டது.

## 6.3. தென்னாசிய சுதந்திர வர்த்தக பிரதேசம்

தென்னாசிய சுதந்திர வர்த்தக பிரதேசமானது (SAFTA)பாகிஸ்தான், இஸ்லாமபாத்தில் நடாத்தப்பட்ட 12 சார்க் மாநாட்டின் போது 2004 ஜனவரியில் கைச்சாத்திடப்பட்டு 2006 ஜனவரியிலிருந்து அமுலுக்கு வந்தது. தென்னாசிய சுதந்திர வர்த்தக பிரதேசமானது (SAFTA)ஆனது 1995 இல் தென்னாசிய முன்னுரிமை வர்த்தக உடன்படிக்கையின் (SAPTA) தாபித்தலுடன் ஆரம்பித்த முன்னுரிமை வர்த்தக ஊக்குவிப்பினூடாக பிராந்திய பொருளாதார ஒருங்கிணைப்பு நிகழ்ச்சித்திட்டத்தினை மேலும் விரிவாக்குவதனை நோக்காகக் கொண்டது.

SAFTA இன் வர்த்தக சுதந்திர நிகழ்ச்சித்திட்டத்தின் (TLP) கீழ், 2016 ஆம் ஆண்டளவில் 10 வருடங்களினைப் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ள, பிராந்தியத்திலிருந்தான பொருட்கள் மீதான சுங்கத் தீர்வைகள் படிப்படியாகக் குறைக்கப்படும். இலங்கையானது 2008.12.31 ஆம் திகதியளவில் குறைவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கும் 2014.12.31 ஆம் திகதியளவில் குறைவிருத்தியல்லா நாடுகளுக்கும் அதன் சுங்கத் தீர்வைகளை 0 – 5% இற்கு குறைத்துள்ளது. குறைவிருத்தி ஒப்பந்த நாடுகள் (கு.வி.நாடுகள்: ஆப்கானிஸ்தான், பங்களாதேஸ், பூட்டான், மாலைதீவு மற்றும் நேபாளம்) 2016 ஆம் ஆண்டளவில் 8 சமமான தவணைக் கட்டணங்களில் 0 – 5% இற்கு கீழிறக்கியுள்ளது.இந்தியா மற்றும் பாகிஸ்தான்

என்பன குறைவிருத்தி நாடுகளுக்கான வர்த்தக சுதந்திர நிகழ்ச்சித்திட்டத்தினை 2008.12.31 ஆம் திகதியளவில் குறைவிருத்திநாடுகளுக்கும் 2013.12.31 ஆம் திகதியளவில் குறைவிருத்தியல்லா நாடுகளுக்கும் பூர்த்தி செய்தல் வேண்டும். இலங்கையானது, குறைவிருத்தியல்லா நாடாக இருந்த போதிலும் வழங்கப்பட்ட அந்தப் பொருளாதாரத்தின் அளவு , நலிவடைந்த தன்மை என்பன 2014 ஆம் ஆண்டளவில் குறைவிருத்தியல்லா நாடுகளுக்கான அதன் வர்த்தக சுதந்திர நிகழ்ச்சித்திட்டத்தினைப் பூர்த்தி செய்வதற்கான ஏனைய நாடுகளின் சம்மதத்தினை பெறக்கூடியதாக இருந்துள்ளது.

இலங்கையானது 2014 இல் SAFTA இன் கீழ் பங்களாதேஸ், இந்தியா, மாலைதீவு, நேபாளம் மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளுக்கு 12.59 மில்லியன் பெறுமதியுடைய பொருட்களை ஏற்றுமதி செய்துள்ளது. இது கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 6 மடங்கு அதிகமாகும்.

ஒவ்வொரு அங்கத்துவ நாடுகளினாலும் 20% இனால் குறைக்கப்பட்ட இரண்டாம் கட்டத்தின் கீழான பாதகப் பட்டியல் குறைப்பானது அனைத்து அங்கத்துவ நாடுகளினாலும்அமுல்படுத்தப்பட்டுள்ளது. 20% கழிப்புக்கு முன்னர் மற்றும் பின்னரான உறுப்பினர்களின் பாதகப் பட்டியலானது பின்வருமாறு;

**(அட்டவணை 02)**

| **அங்கத்துவ நாடு** | **20% கழிப்பனவுக்கு முன்னரான பாதகப் பட்டியல்** | | **20%கழிப்பனவுக்கு பின்னரான பாதகப் பட்டியல்** | |
|---|---|---|---|---|
| | **குறைவிருத்தி நாடுகள்** | **அபிவிருத்திடையாத நாடுகள்** | **குறைவிருத்தி நாடுகள்** | **அபிவிருத்திடையாத நாடுகள்** |
| ஆப்கானிஸ்தான் | 1072 | | 850 | |
| பங்களாதேஸ் | 1233 | 1241 | 987 | 993 |
| பூட்டான் | 150 | | 150 | |
| இந்தியா | 480 | 868 | 25 | 614 |
| மாலைதீவு | 681 | | 152 | |
| நேபாளம் | 1257 | 1295 | 998 | 1036 |
| பாகிஸ்தான் | 1169 | | 936 | |
| இலங்கை | 1042 | | 837 | 963 |

பின்வரும் கூட்டங்கள் 2014 ஜனவரியிலிருந்து டிசம்பர் வரையில் நடாத்தப்பட்டன.

1. 2014 ஜுலை 22 - 23, திம்புவில், சப்ரா நிபுணர்கள் குழுவின் ஒன்பதாவது கூட்டம்
2. 2014 ஜுலை, 24 இல் திம்புவில், சப்ரா அமைச்சர்கள் மட்டத்திலான பேரவையின் எட்டாவது கூட்டம்

மேற்படிக் கூட்டங்களில் பின்வரும் விடயங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டன.

- SAPTA மற்றும் SAFTA மூலவிதிகளுடன் தொடர்படையபொறிமறையனை உறுதிப்படுத்துதல்

- SAARC-ADB பிராந்தியபொருளாதார ஒருங்கணைவு ஆய்வுடன் (Phase-II)தொடர்புடைய விடயங்ளைக் கவனத்தில்கொள்ளுதல்
- வர்த்தக விடுவிப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் அமுலாக்கத்திலுள்ள முன்னேற்றத்தினை மீளாய்வு செய்தல்
- SAFTA (கட்டம் -III) இன் கீழ் நெகிழ்வுப் பட்டியல்களில் குறைப்பு மற்றும் பூட்டான், இந்தியா, மாலைதீவு மற்றும் பாகிஸ்தான்போன்ற நாடுகளினால் அனுப்பி வைக்கப்படும் அனைத்துப் பொருட்களின் மீதான உச்ச தரிவு தொடர்பான பிரேணைகளை 2020 ஆம் ஆண்டளவில் 0 இலிருந்து 5% இற்குக் குறைப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. இதில் நெகிழ்வுத் தன்மை வாய்ந்த பட்டியலிலுள்ள தரிவு வரசைகளின் சிறிய எண்ணிக்கையிலானவை தவிர்ந்த.
- SAFTA இன் கீழ் வர்த்தக சேவைகளிலுள்ளவற்றுடன் தொடர்படைய விடயங்கள்
- தரிவல்லா முறைகள் / துணை தரிவு முறைகளுடன் தொடர்படைய விடயங்கள்
- SAFTA இன் கீழ் சார்க்கிக்கிடையிலான மற்றும் SAFTA இற்கு வெளியேயான வர்த்தக நடவடிக்கைகளுடன்தொடர்புடைய விடயங்கள்
- குறைவிருத்தி நாடுகளுடன் தொடர்புடைய விடயங்கள் (LDCs)
- ஐரோப்பிய ஒன்றியத்தின் பொதுவான முன்னுரிமைகளின் முறைமையின் கீழ் சிறப்பு பிராந்திய ரட்சியடன் தொடர்புடைய விடயங்கள்

## 6.4 வர்த்தக சேவைகள் மீதான சார்க் உடன்படிக்கை

பூட்டானில், 2010 ஏப்பிரலில் இறுதியாக நடாத்தப்பட்ட 16 ஆவது சார்க் மாநாட்டின் போது அங்கத்துவ நாடுகள் வர்த்தக சேவைகள் மீதான சார்க் சட்ட ரீதியான உடன்படிக்கையில் (SATIS) கைச்சாத்திட்டன. அனைத்து நாடுகளும் இந்த உடன்படிக்கையினை ஏற்றுக் கொண்டுள்ளதுடன் SATIS இன் கீழான தேசிய இணக்கப்பாடுகளின் அட்டவணையினை நிறைவு செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளன

வர்த்தக சேவைகள் மீதான சார்க் உடன்படிக்கையின் கீழான தேசிய இணக்கப்பாடுகளின் அட்டவணைகளினை பூர்த்தி செய்யும் செயல்முறையானது அங்கத்துவ நாடுகளில் இடம்பெற்று வருகின்றன. பங்களாதேஸ், பூட்டான், இந்தியா மற்றும் நேபாளம் போன்ற நாடுகள் வர்த்தக சேவைகள் மீதான சார்க் உடன்படிக்கையின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட இறுதிக் கோரிக்கைப் பட்டியல்களை ஏற்கனவே சமர்ப்பித்துள்ளன. இலங்கையின் இணக்கப்பாட்டு அட்டவணையானது அமைச்சரவை அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அமைச்சரவையானது அதனை நிதி அமைச்சின் அவதானங்களுக்காக குறிப்பீடு செய்துள்ளது.

## 6.5 இந்து சமுத்திர கரையோர கூட்டமைப்பு

இந்து சமுத்திர கரையோர கூட்டமைப்பானது (IORA), அரசாங்கம், வியாபாரம் மற்றும் கல்விசார்ந்த குழு என முப்பிரிவுகளைக் கொண்டதும் அவற்றிற்கிடையேஒத்துழைப்பினையும்

நெருங்கிய தொடர்பினையும் பேணி வருகின்ற இந்து சமுத்திர கரையோர நாடுகளுக்கிடையலான பிராந்திய கூட்டமைப்பாகும்.

வர்த்தகம் மற்றும் முதலீடு மீதான தொழிற்படு குழு (WGTI), இந்து சமுத்திர கரையோரக் கூட்டமைப்பு (IORBF), மற்றும் இந்து சமுத்திர கரையோர கல்விசார்ந்த குழு (IORAG) எனும் பெயரிலான அக்கறைதார்களின் குழு தொடர்பில் மூன்று தொழிற்படு குழுக்கள் இருந்துள்ளன. (i) கடற் பயண பாதுகாப்பு (ii)வர்த்தக மற்றும் முதலீட்டு வசதிப்படுத்தல், (iii) மீன்பிடி முகாமைத்துவம், (iv) பேரிடர் முகாமைத்துவம், (V) கல்வி, விஞ்ஞானம்மற்றும் தொழில்நுட்பம் (vi) சுற்றுலா மற்றும் கலாச்சார பரிமாற்றங்கள் போன்ற ஆறு முன்னுரிமை விடயங்கள், நிலையான வளர்ச்சியினை மேம்படுத்துவதற்காகவும் பிராந்தியம் மற்றும் அங்கத்துவ நாடுகளின் மீதியாயுள்ள அபிவிருத்தி மற்றும் பிராந்திய பொருளாதார ஒத்துழைப்புக்காக பொது அமைப்பொன்றினை உருவாக்குதல் போன்றன IORA இனால் இனங்காணப்பட்டுள்ளன.

14 ஆவது IORA அமைச்சர்களின் பேரவை மற்றும் ஒருங்கிணைந்த கூட்டங்கள் என்பன அவுஸ்திரேலிய பேர்த் நகரில் 2014 ஒக்டோபர் 6 -9 வரையில் நடாத்தப்பட்டன. WGTI இன் போது பல அங்கத்துவ நாடுகள் ஏற்பனவே அமுல்படுத்தப்பட்டுள்ள கருத்திட்டங்கள் தொடர்பான விடயங்கள் மற்றும் அவற்றின் புதிய கருத்திட்டங்களுக்கான முன்மொழிவுகள் என்பவற்றினைச் சமர்ப்பித்தன. இலங்கையானது, மேலும் மீளாய்வுகளை வழங்குமாறு கோரப்பட்டிருந்த அங்கத்துவ நாடுகள் தொடர்பில் ஆய்வு செய்வதற்கு உறுதியளித்துள்ள இந்து சமுத்திர கரையோர கல்விசார் குழு குறிப்பீடு செய்த IORA அங்கத்துவ நாடுகள் மற்றும் WGTI பிராந்தியங்களுக்கிடையிலான முதலீடு மற்றும் வர்த்தகம் என்பவற்றினை மேம்படுத்துவதற்கான நிறுவனசார் பொறிமுறையினை ஆய்வு செய்வது தொடர்பில் WGTI இற்கு விளக்கமளித்துள்ளது. WGTI ஆனது இந்து சமுத்திர அவதான மற்றும் எதிர்வுகூறல் முறைமைக்கான நிலையமொன்றினைத் தாபிப்பதற்கான உத்தேச கருத்திட்டமொன்றிற்கான சிரேஷ்ட அதிகாரிகளைக் கொண்ட குழுவினால் உறுதியளிக்கப்பட்ட விடயத்திற்கு 30,000 அமெரிக்க டொலரினை அளிக்க வேண்டுமென பரிந்துரை செய்தது.

இலங்கையானது கூட்டங்களின் போது அங்கத்துவ நாடுகளின் பல்வேறு கருத்திட்டங்களுக்கான தனது அக்கறையினையும் ஆதரவினையும் தெரிவித்துள்ளது.

## 6.6 பல்துறை தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்புக்கான வங்காள விரிகுடா ஆரம்பிக்குகை (BIMSTEC)

பங்களாதேஸ், பூட்டான், இந்தியா, மியான்மார், நேபாளம், இலங்கை மற்றும் தாய்லாந்து ஆகிய 7 நாடுகளினைக் கொண்டுள்ள பல்துறை தொழில்நுட்ப மற்றும்பொருளாதார ஒத்துழைப்புக்கான வங்காள விரிகுடா ஆரம்பிக்குகையானது அங்கத்துவ நாடுகளுக்கிடையிலான வர்த்தக நடவடிக்கைகளினை விரிவாக்குவதனையும்

பிராந்தியங்களுக்கிடையில் சிறந்த பொருளாதார உறவுகளை தாபிப்பதனையும் நோக்காக கொண்டுள்ளது.

மூன்றாவது பிம்ஸ்ரெக் மாநாடு, 14 ஆவது பிம்ஸ்ரெக் அமைச்சர்கள் மட்டத்திலான மாநாடு மற்றும் 16 ஆவது பிம்ஸ்ரெக் சிரேஸ்ட அதிகாரிகளின் கூட்டம் என்பன மியான்மார், நே பியி ரோ இல் மார்ச் 1 - 4 ஆம் திகதி வரையில் நடாத்தப்பட்டது.

அமைச்சர்கள் மட்டத்திலான கூட்டத்தில், அங்கத்துவ நாடுகளின் வெளிநாட்டு அமைச்சர்கள் பிம்ஸ்ரெக்கிலுள்ள முன்னுரிமை விடயங்களின் முன்னேற்றம் குறித்து மீளாய்வு செய்துள்ளதுடன் பின்வரும் நிறுவனங்கள் கையெழுத்திடுவதற்கான தமது சம்மதத்தினையும் தெரிவித்துள்ளார்கள்;

- பிம்ஸ்ரெக் நிரந்தர செயலகத்தினை தாபிப்பது தொடர்பான அமைப்பு அகவிதி
- பிம்ஸ்ரெக் கலாச்சார கைத்தொழில்கள் ஆணைக்குழு மற்றும் பிம்ஸ்ரெக் கலாச்சார கைத்தொழில் அவதானிப்பு நிலையமொன்றிதை தாபிப்பது தொடர்பான புரிந்துணர்வு உடன்படிக்கை
- வானிலை மற்றும் காலநிலைக்கான பிம்ஸ்ரெக் நிலையமொன்றினைத் தாபிப்பது தொடர்பில் பிம்ஸ்ரெக் அங்கத்துவ நாடுகளுக்கிடையிலான அமைப்பு அகவிதி.

சிரேஷ்ட அதிகாரிகளின் கூட்டத்தில், அடுத்த வர்த்தக மற்றும் பொருளாதார அமைச்சர்கள் மட்டத்திலான கூட்டத்தின் போது பின்வரும் உடன்படிக்கைகளினைக் கைச்சாத்திடுவதற்கு உடன்பாடு காணப்பட்டது;

- பிம்ஸ்ரெக் சுதந்திர வர்த்தக பிரதேசம் (FTA) மீதான சட்ட ரீதியான உடன்படிக்கையின் பொருட்களின் வர்த்தகம் தொடர்பான உடன்படிக்கை
- பிணக்குத் தீர்வு நடைமுறைகள் மற்றும் சட்டரீதியான உடன்படிக்கை மீதான பொறிமுறைமை மீதான உடன்படிக்கை
- சுங்க விடயங்களில் ஒத்துழைப்பு மற்றும் பரஸ்பர உதவுகை தொடர்பான உடன்படிக்கை

6 இலக்க மட்டத்தில் 2007 எச்எஸ் குறியீட்டில் 1202 பொருட்களினைக் கொண்டிருக்கின்ற இலங்கையின் பாதகப் பட்டியலுக்கு 2014 நவம்பரில் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டது. அமுல்படுத்தப்படவேண்டிய வரையறைகளுக்கான கால எல்லை குறித்து உடன்பாடு காணப்பட வேண்டியிருப்பதுடன் 2015 இன் முதல் காலாண்டு காலப்பகுதியில் நடாத்தப்படவுள்ள 20 ஆவது தொழில்நுட்ப பேச்சுவார்த்தை குழுவில் இந்த விடயம் குறித்து கலந்தரையாடப்படலாமென எதிர்பார்க்கப்படுகின்றது.

# 7.0 வர்த்தகம், முதலீடு மற்றும் சுற்றுலா ஊக்குவிப்பு

## 7.1 வெளிநாட்டு வணிக பிரதிநிதித்துவம்

வர்த்தகம், முதலிடு மற்றும் சுற்றுலா போன்ற துறைகளில் கூடிய முக்கியத்துவம் கொடுத்து அனுசரணை வழங்கும் நாடுகளில் இலங்கையின் வர்த்தக பொருளாதார நலன்களை ஊக்குவித்தல் மற்றும் பாதுகாத்தல் போன்ற விடயங்களினைக் கவனிப்பதற்காக 23 வெளிநாடுகளிலுள்ள தூதரகங்களில் 25 உத்தியோகத்தர்களைக் கொண்டதான இலங்கை வர்த்தக திணைக்களத்தின் வர்த்தக பிரதிநிதித்துவமானது ஈடுபட்டு வருகின்றது. வர்த்தக உத்தியோகத்தர்கள் “அரச - தனியார் பங்குடமை நிகழ்ச்சித்திட்டம்” எனும் பெயரிலான நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பரந்தளவிலான வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். வர்த்தக திணைக்களமானது, வெ ளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்களிலுள்ள வர்த்தக உத்தியோகத்தர்களின் உதவுகையுடன் இலங்கை ஏற்றமதிகளை விரிவாக்குவதற்கும் இலங்கையின் ஏற்றுமதிப் பொருட்களுக்கான சர்வதேச சந்தைகளை பல்வேறுவகைப்படுத்துவதற்குமான செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது. புதிய ஏற்றுமதிச் சந்தைகளை கண்டறிதல் மற்றும் தற்போதிருக்கும் சந்தைகளில் அதிகளவிலான விரிவாக்கல் சூழலினை ஏற்படத்துதல் என்பவற்றினாடாக சர்வதேச சந்தையில் முன்னணி ஏற்றுமதியாளர்களின் ஏற்றுமதி சந்தைகளை விரிவாக்குவது தொடர்பில் கூடிய கவனம் செலுத்து வரும் அதேவேளையில் சிறிய நடுத்தர ஏற்றுமதியாளர்களுக்கும் அவர்கின ஏற்றுமதிப் பொருட்களுக்கான சர்வதேச சந்தை வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுப்பதிலும் உதவியளித்து வருகின்றனர்.

வெளிநாடுகளிலுள்ள வர்த்தக உத்தியோகத்தர்களினால் நிறைவேற்றப்பட்ட பிரதானதொழிற்பாடுகள் பின்வருவனவற்றினை உள்ளடக்குகின்றன.

- இலங்கை உற்பத்திகளுக்கான ஏற்றுமதி வாய்ப்புக்களை இனங்காண்பதற்கான சந்தை மதிப்பாய்வுகள்/நுண்ணய்வுகளை தொகுத்தல்
- உதவி வழங்கும் நாட்டின் வர்த்தக கொள்கை மாற்றங்கள் விசேடமாக வரி மற்றும் வரியல்லா நடவடிக்கைகள் தொடர்பில் கண்காணித்தலும் அறிக்கையிடலும்.
- முக்கியத்துவம் வாய்ந்த சர்வதேச வர்த்தக கண்காட்சிகள்/நிகழ்வுகளில் இலங்கையின் பங்குபற்றுதலினை ஏற்பாடு செய்தல். இப்பணியானது இலங்கையின் ஏற்றுமதிகளை மேம்படுத்துவதில் அதிக பயனுறுதி வாய்ந்த நடவடிக்கைகளில் ஒன்றாக கருதப்படுகின்றது.
- இலங்கையில் நடைபெறும் கண்காட்சிகள்/நிகழ்வுகளில் வெளிநாட்டு வியாபார தூதுக்குழுக்களை பங்குபற்றுவதற்கு ஏற்பாடு செய்தல்
- அனுசரணை வழங்கும் நாடுகளில் இலங்கையின் (தனி - நாடு) விசேட ஊக்குவிப்பு பிரச்சாரங்களை அரங்கேற்றுதல்.
- வர்த்தக, முதலீடு மற்றும் சுற்றுலா தூதுக்குழுக்கள் இலங்கைக்கு விஜயம் செய்வதற்கான எற்பாடுகளையும் வியாபார வாய்ப்புக்களை கண்டறிவதற்கான ஏற்பாடுகளையும் மேற்கொள்ளுதல்.

- வியாபார வாய்ப்புக்களை கண்டறிவதற்கு இலங்கையிலிருந்தும் இலங்கைக்குமான தனிநபர் வியாபார விஜயங்களை ஏற்பாடு செய்தல்
- அநுசரணை நாடுகளிலுள்ள வர்த்தகம், முதலீடு மற்றும் சுற்றுலா துறை ஆகியவற்றுடன் தொடர்புடைய அதிகாரிகளுடன் வலையமைப்பினை ஏற்படுத்துதல் மற்றும் இலங்கையின் வர்த்தக மற்றும் பொருளாதார நலன்களுடன் தொடர்புடைய பிரச்சனைகள் மற்றும் விடயங்கள் தொடர்பில் பல்வேறுபட்ட அரசாங்க மற்றும் சர்வதேச நிறுவனங்களினை பிரதிநிதித்துவப்படுத்துதல்.
- இலங்கை ஏற்றுமதியாளர்களுக்கு வர்த்தகம், முதலீடு மற்றும் சுற்றுலாத்துறையுடன் தொடர்புடைய விசாரணைகளை வழங்குதல், வெளிநாட்டு வியாபாரம் தொடர்பான விஜயங்கள்/கூட்டங்களை நடாத்துதல், தொழில்நுட்ப உதவுகையினை வழங்குதல், வர்த்தகம் தொடர்பான பிணக்குகளை தீர்த்தல் போன்றன.

2010 ஜனவரியிலிருந்து 2014 டிசம்பர் வரையிலான காலப்பகுதியில் வர்த்தக உத்தியோகத்தர்களினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் பொழிப்பு கீழே தரப்பட்டுள்ளது.

(அட்டவணை 03)

| நடவடிக்கைகள் | 2010 | | 2011 | | 2012 | | 2013 | | 2014 | | மொத்தம் (2010-2014) | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | கண்காட்சிகள்/தூதுக் குழுக்களின் எண்ணிக்கை | பங்குபற்றுனர்கள்/தூத குழுக்களின் எண்ணிக்கை | கண்காட்சிகள்/தூதுக் குழுக்களின் எண்ணிக்கை | பங்குபற்றுனர்கள்/தூதக்குழுக்களின் எண்ணிக்கை | கண்காட்சிகள்/தூதுக் குழுக்களின் எண்ணிக்கை | பங்குபற்றுனர்கள்/தூதக்குழுக்களின் எண்ணிக்கை | கண்காட்சிகள்/தூதுக் குழுக்களின் எண்ணிக்கை | பங்குபற்றுனர்கள்/தூதக்குழுக்களின் எண்ணிக்கை | கண்காட்சிகள்/தூதுக் குழுக்களின் எண்ணிக்கை | பங்குபற்றுர்கள்/தூதுக்குழுக்களின் எண்ணிக்கை | கண்காட்சிகள்/தூதுக் குழுக்களின் எண்ணிக்கை | பங்குபற்றுனர்கள்/தூதக்குழுக்களின் எண்ணிக்கை |
| அனுசரணை வழங்கும் நாட்டில் இலங்கையிலிருந்தான ஊக்குவிப்பு சந்தை பங்குபற்றல் | 52 | 510 | 59 | 671 | 80 | 728 | 75 | 848 | 61 | 737 | 327 | 3494 |
| அனுசரணை வழங்கும் நாட்டிலிருந்து இலங்கையில் ஊக்குவிப்பு சந்தை பங்குபற்றல் | 12 | 47 | 26 | 90 | 29 | 122 | 37 | 325 | 22 | 169 | 126 | 753 |
| இலங்கை எக்ஸ்போ 2012 இற்கான பங்குபற்றாளர்கள் | பொருத்தமற்றது | பொருத்தமற்றது | பொருத்தமற்றது | பொருத்தமற்றது | 01 | 1160 | பொருத்தமற்றது | பொருத்தமற்றது | பொருத்தமற்றது | பொருத்தமற்றது | 1 | 1,160 |
| அனுசரணை வழங்கும் நாடுகளில் இலங்கை குறித்த ஊக்குவிப்பு பிரச்சாரங்கள் (தனியொரு நாடு) | 88 | பொருத்தமற்றது | 116 | பொருத்தமற்றது | 138 | பொருத்தமற்றது | 127 | பொருத்தமற்றது | 33 | பொருத்தமற்றது. | 502 | பொருத்தமற்றது. |
| இலங்கைகான தூதுக்குழுக்கள் (எக்ஸ்போ – 2012 தவிர்ந்த) | 49 | 385 | 43 | 282 | 48 | 457 | 98 | 563 | 35 | 387 | 273 | 2,074 |
| அனுசரணை வழங்கும் நாட்டுக்கான தூதுக்குழுக்கள் | 41 | 437 | 61 | 436 | 54 | 455 | 70 | 600 | 78 | 805 | 304 | 2,733 |
| அனுசரணை வழங்கும் நாட்டுக்கான தனிநபர்களின் விஜயங்கள் | பொருத்தமற்றது | 147 | பொருத்தமற்றது | 174 | பொருத்தமற்றது | 181 | பொருத்தமற்றது | 201 | பொருத்தமற்றது | 280 | பொருத்தமற்றது | 983 |
| அனுசரணை வழங்கும் நாட்டுக்கான தனிநபர் விஜயம் | பொருத்தமற்றது | 147 | பொருத்தமற்றது | 139 | பொருத்தமற்றது | 194 | பொருத்தமற்றது | 270 | பொருத்தமற்றது | 237 | பொருத்தமற்றது | 987 |
| பதிலளிக்கப்பட்டஇருவழி வர்த்தக விசாரணைகள் | 1728 | | 1751 | | 1882 | | 2133 | | 2,132 | | 9,626 | |

## 7.2 தேசத்திற்கு மகுடம் – 2013, தேசிய அபிவிருத்தி கண்காட்சியில் வர்த்தக திணைக்களத்தின் தகவல் நிலையம்

வர்த்தக திணைக்களமானது, குளியாப்பிட்டியில் நடாத்தப்பட்ட "தேசத்திற்கு மகுடம் – 2014" எனும் தேசிய அபிவிருத்தி கண்காட்சியில் பங்குபற்றியிருந்ததுடன் வர்த்தகம் திணைக்களம் தொடர்பான தகவல்களைக் கொண்ட கை நூலொன்று வர்த்தக திணைக்களத்தின் தகவல் நிலையத்தில் வைத்து பொதுமக்கள், மாணவர்கள் மற்றும் வர்த்தக திணைக்களத்தினால் அளிக்கப்பட்டு வரும் சேவைகளினைப் பெறுபவர்கள் மற்றும் ஏற்றுமதி நடவடிக்கையில் ஈடுபடுகின்றவர்களுக்கு அறிவூட்டும் நோக்குடன் விநியோகிக்கப்பட்டதுடன் வெளிநாடுகளிலுள்ள வர்த்தக உத்தியோகத்தர்களுடன் ஆர்வமுடைய தொழில் அதிபர்கள், வியாபார தகவல்களைப் பெறும் நோக்குடன் வீடியோ மாநாடு வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டன.

## 7.3 விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்

**கொழும்பில், 2014 மார்ச்சில் நடாத்தப்பட்ட உலக வர்த்தக நிறுவனத்தின் இலங்கைக்கான தேவை மற்றும் முன்னுரிமைகளின் வர்த்தக வசதிப்படுத்தல் சுய மதிப்பீடு மீதான கருத்தரங்கு**

இந்த கருத்தரங்கானது வொஷிங்டனிலுள்ள இலங்கைத் தூதரகத்துடன் இணைந்து வர்த்தக திணைக்களத்தினால் வெளிநாட்டு நேரடி உதவுகை மற்றும் ஐக்கிய அமெரிக்காவின் உணவுக் கைத்தொழில் ஆகியவற்றிலிருந்தான நிபுணத்துவம் பெற்ற தனியார் துறையுடன் இலங்கையின் தற்போதைய மற்றும் உள்ளார்ந்த உணவு மற்றும் அதனுடன் தொடர்புடைய 55 பங்குபற்றாளர்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டது. கருத்தரங்கின் நோக்கம் ஐக்கிய அமெரிக்காவின் உணவு நவீனமயப்படுத்தல் சட்டம் மற்றும் குறித்த ஆண்டின் இறுதிக்க காலப்பகுதியில் இலங்கையில் நடாத்தப்படவுள்ள நேரடி வெளிநாட்டு உதவுகையின் பரிசோதனை செயல்முறைக்கம் ஆகியவை தொடர்பில் விழிப்புணர்வினை ஏற்படுத்துதாக அமைந்திருந்தது.

## 7.4 சுற்றுலா ஊக்குவிப்பு

நாட்டில் தீவிரவாதம் தோற்கடிக்கப்பட்டதன் பின்னர், உடனடியாக கவனம் செலுத்தப்பட்ட துறைகளில் சுற்றுலாத்துறையும் ஒன்றாகும். சுற்றுலாத்துறையில் மறைந்துள்ளவற்றினை வெளிக்கொணர்ந்து அவற்றிற்கு அங்கீகாரம் வழங்கும் நோக்குடன் வர்த்தக உத்தியோகத்தர்களினால் இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகத்தின் ஆதரவுடன் வெளிநாடுகளில் பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இலங்கை விமான சேவையானது கண்கவர் சுற்றுலா இடமாக இலங்கையை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைளையும் மேற்கொண்டுள்ளது. சுற்றுலா இடமாக இலங்கையை ஊக்குவிப்பதற்கு வர்த்தக உத்தயோகத்தர்களினால் பின்பற்றப்படும் பிரதான தந்திரோபாயங்கள், விசேட கருத்தரங்குகள், மற்றும் மாநாடுகளை ஏற்பாடு செய்தல், சுற்றுலா குழுக்கள் விஜயம்செய்தல், சர்வதேச சுற்றுலா சந்தைகளில் பங்குபற்றுதல், இலங்கைக்கான ஊடக தூதுக்குழுக்களை

ஏற்பாடு செய்தல், சுற்றுலா ஊக்குவிப்பு பேரவைகள், அநுசணை வழங்கும் நாட்டிலுள்ள இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்களினூடாக பிரபல்யப்படுத்துதல் போன்றவை உள்ளடங்குகின்றன.

## 7.5 வெளிநாட்டுநேரடி முதலீட்டு ஊக்குவிப்பு (FDI)

வெளிநாட்டிலுள்ள வர்த்தக உத்தியோகத்தர்கள் நாட்டிற்குள் வெளிநாட்டு நேரடி முதலீட்டினக்கொண்டு வருவதில் பெரும் பங்கினை ஆற்றியுள்ளனர். மீளாய்வு காலப்பகுதியில், வர்த்தக உத்தியோகத்தர்கள் 100 இற்கும் அதிகமான வெளிநாட்டு கம்பனிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்தியள்ளதுடன் திறமை வாய்ந்த முதலீட்டாளர்களாக இனங் காணப்பட்டவர்களுக்கு நாட்டில் கிடைக்கக் கூடிய முதலீட்டு வாய்ப்புக்கள் குறித்து விளக்கமளிக்கப்பட்டுள்ளன. இவர்களில் சிலர் ஏற்கனவே தொழிற்சாலைகளை அமைப்பதற்காக இலங்கைக்கு வருகை தந்துள்ளார்கள்.

## 7.6. வதிவிட விசாவுக்கான பரிந்துரை

வர்த்தக திணைக்கமானது, இலங்கையிலுள்ள வெளிநாட்டு தொழில் அதிபர்கள், தொழில் முயற்சியாளர்கள், தொழில்நுட்பவியலாளர்கள், உசாவுலர்கள் மற்றும் ஆராய்ச்சி உத்தயோகத்தர்கள் ஆகியோருக்கான வதிவிட விசாக்களுக்கான பரிந்துரைகளை குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்கள கட்டுப்பாட்டாளருக்கு வழங்குவதில் கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சின் செயலாளருக்கு உதவியளிக்கின்றது. இப்பணியினை நிறைவேற்றுவதற்காக திணைக்களமானது உண்மையாக பரிந்துரை செய்யப்பட்ட விசாக்களை உறுதிப்படுத்துவதில் கூடிய கவனம் செலுத்துவதுடன் தேசிய அபிவிருத்தி அவ்வாறே மனிதவள அபிவிருத்தி நோக்கிலான ஆதரவினையும் வழங்குகின்றது.

குறித்த ஆண்டு காலப்பகுதியில் வர்த்தக திணைக்களமானது, 40 இந்திய, 37 பிரித்தானிய,15 யப்பானிய மற்றும் 11 பாகிஸ்தானிய மற்றும் அவுஸ்திரேலிய, சீன, ஐரிஷ், சிங்கப்பூர்,ரோமனியன் மற்றும் சுவீடிஷ் உள்ளடங்கலான பல்வேறு நாடுகளிலிருந்தான 89 விண்ணப்பதாரிகள்மற்றும் 56 தங்கியிருப்போர் உள்ளடங்கலான 145 குடிபெயர்ந்தவர்களுக்கான வதிவிட விசா பரிந்துரைகளை வழங்கியுள்ளது.

## 7.7 1949 ஆம் ஆண்டின் 06 ஆம் இல. குத்தகை சட்டத்தின் கீழ் கடன் முகவராண்மைகளின் அங்கீகாரம்

1949 ஆம் ஆண்டின் 6 ஆம் இல. குத்தகை சட்டத்தின் கீழ், ஏதேனும் கம்பனி, நிறுவனம் அல்லது தனிநபரினை அங்கீகரிக்கப்பட்ட கடன் முகவராண்மையாக பிரகடனப்படுத்துவதற்கான அதிகாரமானது வர்த்தகப் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. பணிப்பாளர் நாயகமானவர்1949 ஆம் ஆண்டின் 6 ஆம் இல. குத்தகை சட்டத்தின் 114(1) ஆம் பிரிவின் கீழ் கௌரவ அமைச்சரினால் நியமிக்கப்பட்ட தலைவர் மற்றும் இரண்டு ஏனைய உறுப்பினர்களைக் கொண்ட சபையின் பரிந்துரைகளின் அடிப்படையில் அவ்வாறு மேற்கொள்வதற்குத் தேவைப்படுத்தப்படுகின்றார்.

1949 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க குத்தகைச் சட்டத்தின் பிரிவு 114(1) இன் கீழ் கௌரவ கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சருக்கு உரித்தளிக்கப்பட்ட தத்துவத்தின் மூலம் மேற்படிச் சட்டத்தின் நோக்கங்களுக்காக தாபிக்கப்பட்டுள்ள சபையின் தலைவராக மிரு.ஆர்.சேமசிங்கவினையும் திரு.அனுர வீ.மெத்தகொட மற்றும் திரு.வீ.எம்.வீரசிங்க ஆகியோரினை சபையின் உறுப்பினர்களாகவும் 2014 ஜனவரி 13 ஆம் திகதியிலிருந்து 2017 ஜனவரி 12 ஆம் திகதி வரையிலான 03 வருட காலப்பகுதிக்கு பயனுறுதியாகும் வகையில் நியமித்துள்ளார்.

சபையானது குறிப்பிட்ட மீளாய்வு ஆண்டு காலப்பகுதியில் சமர்ப்பிக்கப்பட்ட 18 விண்ணப்பங்களில் 11 விண்ணப்பங்களுக்குப் பரிந்துரையினை மேற்கொண்டுள்ளதுடன் அதற்கிணங்க, 10 விண்ணப்பங்கள் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டன. (அதாவது. HDFC வங்கி பரிந்துரையினைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் அதன் விண்ணப்பத்தினை மீளப் பெற்றுக் கொண்டது)

<u>அங்கீகாரத்திற்காகப் பெற்றுக் கொள்ளப்பட்ட விண்ணப்பங்கள்</u>

1. சிற்றிசன்ஸ் டிவெலெப்மென்ற் பிஸினஸ் பினான்ஸ் பிஎல்சி (CDB)
2. ரீகேஎஸ் பினான்ஸ் லிமிட்டட்
3. கொமெர்ஸல் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
4. வெலிபெல் பினான்ஸ் பீஎல்சி
5. லங்கா ஒறிக்ஸ் பினான்ஸ் பிஎல்சி
6. LOLC மைக்றோ கிரெடிற் விமிட்டட்
7. சம்பத் லீசிங்க மற்றும் பக்ரறிங் லிமிட்டட். – அங்கீகரிக்கப்பட்டது
8. இலங்கை HDFC வங்கி– அங்கீகரிக்கப்பட்டது
9. ககனா கோர்டினேஷன் அன்ட் முதலீட்டு தனியார் லிமிட்டட்
10. ஏசியா அசெற் பினான்ஸ் லிமிட்டட்
11. குளோபல் ட்ரஸ்ற் பினான்சியல் சேர்விஸஸ் லிமிட்டட்
12. அசோசியேற்றட் மோட்டர் பினான்ஸ் கம்பனி லிமிட்டட்
13. பீப்பிள்ஸ் மேர்சன்ற் பினான்ஸ் பிஎல்சி
14. நேஷன் லங்கா பினான்ஸ் பிஎல்சி
15. ஈரிஜ பினான்ஸ் லிமிட்டட்
16. பீப்ப்ள்ஸ் மைக்றோ பினான்ஸ் லிமிட்டட்
17. கப்பிற்றல் ட்ரஸ்ற் தனியார் விமிட்டட்
18. மேர்கன்ரைல் இன்வெஸ்ற்மென்ற் பினான்ஸ் பிஎல்சி

<u>பரிந்துரை செய்யப்பட்டு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பபட்ட விண்ணப்பங்கள்</u>

1. கொமர்ஸல் லீசிங் அன்ட் பினான்ஸ் லீசிங் பிஎல்சி
2. வலிபெல் பினான்ஸ் பிஎல்சி
3. லங்கா ஒறெக்ஸ் பினான்ஸ் பிஎல்சி
4. LOLC மைக்றோ கிரெடிட் லிமிட்டட்

பரிந்துரைசெய்யப்பட்டது 17.06.2014
(வர்த்தமானியிடப்பட்டது 03.09.2014)

5. சம்பத் லீசிங் அன்ட் பினான்ஸிங் லிமிட்டட்

6. பீப்பிள்ஸ் மேர்சன்ற் பினான்ஸ் பிஎல்சி
05.11.2014

7. சிறிறசன் டிவெலப்மெனற் பிஸினஸ் பினான்ஸ் பிஎல்சி (சிடிபி)

8. ரீகேஎஸ் பினான்ஸ் லிமிட்டட்

9. அசோசியேற்றட் மோட்டர் பினான்ஸ் கம்பனி லிமிட்டட்

10. மேர்கன்ரைல் இன்வெஸ்ட்மென்ற்ஸ் அன்ட பினான்ஸ் பீஎல்சி

பரிந்துரைசெய்யப்பட்டது (வர்த்தமானியிடப்பட்டது 10.12.2014)

## 8.0 உற்பத்தி நாட்டுச் சான்றிதழ்களினை வழங்குதல்

வர்த்தக திணைக்களமானது பின்வரும் முன்னுரிமை மற்றும் சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளின் கீழ் ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களுக்கான உற்பத்தி நாட்டு சான்றிதழ்களை வழங்குகின்றது.

- முன்னுரிமையின் பொதுவான முறைமை (GSP)
- வர்த்தக முன்னுரிமையின் பூகோள முறைமை (GSTP)
- சார்க் முன்னுரிமை வர்த்தக உடன்படிக்கை (SAPTA)
- தென்னாசிய சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (SAFTA)
- இந்திய இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை ((ISFTA)
- பாகிஸ்தான் இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை ((PSFTA)
- ஆசிய பசுபிக் வர்த்தக உடன்படிக்கை (APTA)

வேலை நாளொன்றில் சராசரியாக வர்த்தக திணைக்களத்தினால் 500 உற்பத்தி நாட்டுச் சான்றிதழ்கள் செயல்முறைப்படுத்தப்பட்டு வழங்கப்படுகின்றன. அட்டவணை 03 ஆனது 2010 – 2014 ஆம் ஆண்டு காலப்பகுதியில் வர்த்தக திணைக்ள்ளத்தினால் உரிய முன்னுரிமை வர்த்தக உடன்படிக்கைகளின் கீழ் வழங்கப்பட்ட உற்பத்தி நாட்டுச் சான்றிதழ்களின் எண்ணிக்கையினைக் குறிப்பிடுகின்றது.உயர்தரத்தில் பயிற்சியளிக்கப்பட்ட உத்தியோகத்தர்களினைக் கொண்ட குழுவொன்றுஉற்பத்தி நாட்டுச்சான்றிதழ் வழங்கும் பிரிவில் முழுநேரமும் நியமிக்கப்பட்டுள்ளதுடன் முன் அனுமதியின்றி அலுவலக நேரங்களில் உசாவுதல்களும் மேலதிக விளக்கங்களும் அளிக்கப்பட்டு வருகின்றன. உயர் பதவியினை வகிக்கும் உத்தியோகத்தர்களினால் தினசரி சராசரியாக 30 முதல் 50 வரையிலான உசாவுதவல்கள் வழங்கப்பட்டு வருகின்றன. உற்பத்தி நாட்டுச் சான்றிதழ்களின் வழங்குகையானது வேறுபட்ட உடன்படிக்கைகள்/ஏற்பாடுகளின் கீழான உரிய மூல விதிகளின் வகையீடுகளில் ஆழமான அறிவுடன் விசேடமாக வடிவமைக்கப்பட்டு உயர்தரத்தில் வழங்கப்பட்டு வருகின்றது.

இது தொடர்பில் வர்த்தக திணைக்களம் பின்வருவனவற்றிற்கு பொறுப்பாகின்றது;

*(அ)* வரிச்சலுகைகளுக்கான பொருட்களின் தகமையினை மதிப்பீடு செய்தல்

*(ஆ)* ஏற்றுமதியாளர்களின் விபரங்களைப் பதிவு செய்தலும் பேணுதலும்,

*(இ)* தமது தகமையினை நிரூபிப்பதற்காக ஏற்றுமதியாளர்களினால் சமர்ப்பிக்கப்படும் செலவுக் கூற்றுக்கள் மற்றும் ஏனைய இணை ஆவணங்களை மதிப்பீடு செய்தல்,

*(ஈ)* முன்னுரிமை வழங்கும் நாடுகளின் கோரிக்கையின் பேரில் உற்பத்தி நாட்டுச் சான்றிதழ்களின் வழங்குகையின் பின்னரான கணக்காய்வினை நடாத்துதல் மற்றும் *(உ)* உற்பத்தி நாட்டுச் சான்றிதழ்களுடன் தொடர்புடைய தரவுகள் மற்றும் பகுப்பாய்வுஅறிக்கைகளினை தொகுத்தலும், போன்றவை உள்ளடங்குகின்றன.

## <u>வர்த்தக திணைக்களத்தினால் வழங்கப்படும் உற்பத்தி நாட்டு சான்றிதழ்கள் (அட்டவணை 04)</u>

| உடன்படிக்கை | வழங்கப்பட்டுள்ள உற்பத்தி நாட்டு சான்றிதழ்களின் எண்ணிக்கை | | | | |
|---|---|---|---|---|---|
| | **2010** | **2011** | **2012** | **2013** | **2014** |
| EU GSP | 88,409 | 85,600 | 114,029 | 79,774 | 83,898 |
| GSP- ஏனைய நாடுகள் | 15,434 | 14,782 | 13,909 | 13,410 | 12,706 |
| GSP-CIS நாடுகள் | 871 | 856 | 1,009 | 929 | 842 |
| ISFTA | 10,373 | 35 | 9,742 | 11,088 | 10,852 |
| PSFTA | 5,219 | 30 | 8,057 | 8,190 | 7,069 |
| APTA | 1,906 | 2,424 | 2,781 | 3,482 | 4,131 |
| SAFTA | - | - | 26 | 74 | 388 |
| SAPTA | 239 | 248 | 253 | 243 | 309 |
| GSTP | 99 | 115 | 136 | 147 | 107 |
| **மொத்தம்** | **122,550** | **104,090** | **149,942** | **117,337** | **120,302** |

## பதவியினர் இடநகர்வுகள் – 2014

| உத்தியோகத்தரின் பெயர் | நாடு / நகரம் | திகதி |
|---|---|---|
| **திணைக்களம் திரும்பியவர்கள்** | | |
| திரு.எல்.ஜி.திசாநாயக்க<br>உதவி வர்த்தக பணிப்பாளர் | ஸ்ரொக்கோல்ம் | 2014.02.03 |
| திருமதி.ஈ.ரி.எம்.சி.எஸ்.அபேரத்ன<br>உதவி வர்த்தக பணிப்பாளர் | மொஸ்கோ | 2014.03.31 |
| செல்வி.ஜே.ஏ.வை.ஜி.ஜயசூரிய<br>உதவி வர்த்தக பணிப்பாளர் | பாரிஸ் | 2014.05.06 |
| திரு.ஆர்.ஜீ.எஸ்.பீ.கே.விஜேசேகர<br>பிரதி வர்த்தக பணிப்பாளர் | சென்னை | 2014.07.01 |
| செல்வி. யூ,சமரதுங்க<br>பிரதி வர்த்தக பணிப்பாளர் | மும்பாய் | 2014.07.07 |
| திருமதி.கே.டீ.என்.கொடிக்கார<br>உதவி வர்த்தக பணிப்பாளர் | பிறீரோறியா | 2014.12.31 |
| திருமதி.கோதமி.ஆர்.சில்வா<br>வர்த்தக பணிப்பாளர் | ரோம் | 2014.03.15 |
| திரு.பீ.நீ.பி.ஜயக்கொடி<br>உதவி வர்த்தக பணிப்பாளர் | கெய்ரோ | 2014.07.13 |
| திரு.வை.வை.கே.டீ சில்வா<br>உதவி வர்த்தக பணிப்பாளர் | சியோல் | 2014.06.30 |
| **இடமாறல் நியமனங்கள்** | | |
| திருமதி.கோதமி. ஆர்.சில்வா<br>வர்த்தக பணிப்பாளர் | புருஸல்ஸ் | 2014.03.17 |
| திரு.டீ.டப்.ஜினதாச<br>பிரதி வர்த்தக பணிப்பாளர் | ரோம் | 2014.04.05 |
| திருமதி.வீ.எஸ்.பண்டார<br>உதவி வர்த்தக பணிப்பாளர் | மும்பாய் | 2014.10.25 |
| திருமதி.ஆர்.மல்லிகாராச்சி<br>உதவி வர்த்தக பணிப்பாளர் | சிங்கப்பூர் | 2014.08.08 |
| திரு.பீ.ஏ.எஸ். பொன்னம்பெரும<br>பிரதி வர்த்தக பணிப்பாளர் | புது டில்லி | 2014.11.18 |

| | | |
|---|---|---|
| திரி.பீ.கே.எஸ்.பட்டிவல<br>உதவி வர்த்தக பணிப்பாளர் | கோலாலாம்பூர் | 2014.04.20 |
| திரு.பீ.ஜீ.பி.ஜயக்கொடி<br>உதவி வர்த்தக பணிப்பாளர் | பிறேசில் | 2014.07.14 |
| திரு.டப்.பீ.ஏ.எப்.குணசேகர<br>உதவி வர்த்தக பணிப்பாளர் | பாரிஸ் | 2014.04.20 |
| செல்வி.சீ.கே.கிரிந்திவல<br>உதவி வர்த்தக பணிப்பாளர் | மொஸ்கோ | 2014.05.13 |
| திருமதி.எம்.எம்.ரீ.டி.முல்லேகம்கொட<br>உதவி வர்த்தக பணிப்பாளர் | ஸ்ரொக்கோல்ம் | 2014.03.28 |

| தலைப்பு இல. 295<br>அமைச்சு/திணைக்களம் : வர்த்தக திணைக்களம்<br>நிகழ்ச்சித்திட்ட இல. 01<br>கருத்திட்ட இல. 01<br>மீண்டுவரும் செலவினம் | | | | | |
|---|---|---|---|---|---|
| விபரணம் | (2013) உண்மை செலவினம் (ரூபா) | (2014) அங்கீகரிக்கப் பட்ட மதிப்பீடு (ரூபா | (2014) மீளாய்வு செய்யப்பட்ட மதிப்பீடு (ரூபா) | (2014) உண்மை செலவினம் (ரூபா | சேமிப்பு (ரூபா) |
| ஆளுக்குரிய வேதனாதிகள் | 31,015,639 | 37,600,000 | 34,190,000 | 34,178,906 | 11,094 |
| ஏனையவைகள் | 61,624,657 | 57,700,000 | 58,060,000 | 57,609,930 | 450,070 |
| **மொத்தம்** | **92,640,296** | **95,300,000** | **92,250,000** | **91,788,836** | **461,164** |

## வருடாந்த கணக்குகள்: பக்கம் 2

| மூலதன செலவினம் | | | | | |
|---|---|---|---|---|---|
| விபரணம் | ('000) உண்மை செலவினம் (2013) | ('000) மதிப்பீட்டு செலவினம் (2014) | ('000) மீளாய்வு செய்யப்பட்ட மதிப்பீடு (2014) | ('000) உண்மை செலவினம் (2014) | சேமிப்பு (2014) |
| **மூலதனச் சொத்துக்களின்புனரமைப்பும் மேம்பாடும்** | **111** | **500** | **500** | **140** | **360** |
| பொறி, இயந்திரங்களும் உபகரணங்களும் (2002) | 20 | 200 | 200 | 43 | 157 |
| வாகனங்கள் (2003) | 91 | 300 | 300 | 97 | 203 |
| **மூலதனச் சொத்துக்களின் கொள்ளல்** | **4,050** | **2,700** | **4,950** | **4,905** | **45** |
| வாகனங்கள் (2101) | 150 | 0 | 0 | 0 | 0 |
| தளபாடங்களும் அலுவலக உபகரணங்களும் (2102) | 3,665 | 2,500 | 4,750 | 4,707 | 43 |
| இயந்திரங்கள் (2103) | 235 | 200 | 200 | 198 | 2 |
| **திறன் விருத்தி** | **212** | **2,500** | **3,300** | **3,166** | **134** |
| பயிற்சியும் திறன் கட்டியெழுப்பலும் (2401) | 212 | 2,500 | 3,300 | 3,166 | 134 |
| **ஏனைய மூலதன செலவுகள்** | **4,595** | **6,000** | **6,000** | **5,020** | **980** |
| வர்த்தக ஊக்குவிப்பு நடவடிக்கைகள் (2502) | 4,595 | 6,000 | 6,000 | 5,020 | 980 |
| **மொத்தம்** | **8,968** | **11,700** | **14,750** | **13,231** | **1,519** |